ஞாயிறு வெளியீடு　ஆண்டு சந்தா ரூ. 5　தனிப்பிரதி 0—1—3　REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4　காஞ்சிபுரம் 10—2—1946　இதழ் 43

சிறு கதை:

# “ராஜாடி! ராஜா!!”

★

தாங்கமுடியாதவெயில். தாகமோ தொண்டையை அடைத்தது. தாகத்தைத் தணிப்பதற்காகத் தண்ணீரைநோக்கி நடந்தான் மாரி. கரையைவிட்டு இரண்டடி எடுத்து வைத்ததும், அவன் மடியிலிருந்த நாலணுவெள்ளிப்பணம், அவனுக்கு முன்னேடித் தண்ணீரைத்தொட்டு நின்றது. அன்றைக்கு அவனுக்குக் கிடைத்தகூலி அது. கோழி கூவுவதற்கு முன்பே, மாரிமுத்தவிற்கு கணக்கப்பிள்ளை இடமிருந்து ஆள் வந்தான். கணக்கப்பிள்ளை கூப்பிட்டனுப்பியதும், கஞ்சிகூடக்குடிக்காமல் மாரி களத்திற்குப்போனுன். வேலை முடிந்ததும் மாரி தலையிலிருந்த துணியைத்தட்டிக் கட்கத்தில் வைத்தான். விபூதிப்பையை எடுத்து, காசுக்குத் துழவினுர், கிடைக்கவில்லை. காசுகளைக்கையிலே கொட்டி, ஒருநாலணுவை மாரிக்குக்கொடுத்தார்—இல்லை மாரியை நோக்கி விட்டெறிந்தார்.

“சாமி” என்றான் மாரி.

“ஏண்டா, போதும் போடா”

“காசுக்கில்லீங்க சாமி, இன்னெரு நாலணுப்பணம் உங்கையிலிருந்து கீழே மண்ணில் விழுந்து விட்டது”

கணக்கப்பிள்ளை தன் காலடியைப்பார்த்தார். மாரி சொன்னது உண்மை. நாலணுவை எடுத்து விபூதிப்பையில் போட்டபடியே, மாரி போவதற் கறிகுறியாகக் கையை பசைத்தார். கையில் இருக்கும்நாலணுவைப்பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்து மாரி குளத்தை நோக்கி நடந்தான். கணக்கப்பிள்ளைக்கும் மகிழ்ச்சிதான், அதை அவர்வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. “மாரிஎவ்வளவு யோக்யமானவன், நாலணுக்கொடுத்ததும்பரமதிருப்தியடைந்ததல்லாமல் கீழேவிழுந்த நாலணுவைக்கைப்பற்றவும்நினைக்கவில்லை.” என்று எண்ணிக்கொண்டேகணக்கப்பிள்ளை வீட்டுக்குத்திரும்பினர்.

கீழேவிழுந்த பணத்தை மடியில் முடிந்துகொண்டு, மாரி தண்ணீரில் இறங்கினுன். பாசியை விலக்கி, இரண்டுகை தண்ணீர்குடித்தான். இளநீர்கூடத்தோற்றுவிடும். ‘அப்பாடா’ என்று மூன்ருவதுகைதண்ணீரைக் குடிக்கும்பொழுதுதான், முகத்திலிருந்த வேர்வையின் உப்பு நாற்றமும், வைக்கோல்தூசுகளும் குமட்டலை உண்டாக்கின. வாயைக் கொப்பளித்துக் கொண்டு, தலைமயிரை உதறிமுடிந்து, முகத்தைக் கழுவினுன், பின்னுலிருந்து ‘ளொள், ளொள்’ என்ற சத்தம் கேட்டது. மாரி திரும்பிப்பார்த்தான். மரத்து நிழலில், அழகான நாய் வளைந்து படுத்திருந்தது. அது மாரியைப் பார்த்துக் குரைக்கவில்லை. ஏதோ அதற்கேற்பட்ட உற்சாகம்! மாரி கரைக்குவந்ததும், நாய் விளையாட்டில் சூழ்ந்திருப்பதாக அவனுக்குப் பட்டது. கண்களையும், முகத்தையும் துடைத்துக்கொண்டு பார்த்த பொழுது நாயின்வாயில் ஏதோ வெண்மையான சாமான் காணப்பட்டது. ‘எலும்புத்துண்டு’ என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டு, மாரி ஐந்தாறு அடி நடந்தான். “சே! எலும்புத்துண்டல்ல. எலும்புத்துண்டாயிருந்தால் மின்னுமா!” என்றகேள்வி பிறந்ததும் மாரி மறுபடியும் திரும்பினுன். இவனைக்கண்டதும் நாய் மற்றெரு மரத்திற்கு ஓடியது. ‘மின்னுகிற சாமான் ஒருவேளை வெள்ளிடப்பி…………………” அதற்குமேல் மாரி எண்ணவில்லை. போதுமான காரணங்கள் அகப்பட்டதும், ஆராய்ச்சிகள் எதற்கு? நாயை எப்படியும் பிடித்துவிடுவதென ஓடினுன்.

நாய் வேலிச்சந்துகளிலெல்லாம் புகுந்து வெளிக்கிளம்பியது. மாரி விடுவதாயில்லை, அதைப்பின்தொடர்ந்தான். சருகு, புல்தரை, சுடுமணல், கல், முள் ஒன்றையும்பார்க்காமல்ஓடினுன். நாயின்வேகம்அதிகரிக்க, அதிகரிக்க மாரியின் கோபமும் அதிகரித்தது. பக்கத்திலிருந்த கற்களைப்பொறுக்கிக் கொண்டு நாயைத் தொடர்ந்தான். நாய்சலிப்பதாகக்காணேம், நாலைந்து அம்புகளை எவினுன் மாரி. கடைசியாக அதன்காலில் சரியான அடி விழுந்தது. நாய் சமாளிப்பதற்குள் மாரி கோட்டையை நெருங்கிவிட்டான். ‘இனிமேல் பயனில்லை’ என்பதைக் கண்டுகொண்ட நாய், வாயிலிருந்ததைக்கீழேத்தள்ளிவிட்டு, நொண்டிக்கொண்டே ஓடிவிட்டது.

மாரி ஆவலோடு அதை எடுத்தான். ப்பூ! இவ்வளவுதானு! வெறும் தேங்காய்த்துண்டு. அதுதான்வெயிலில்மினுக்கியது. எவ்வளவுஓட்டம்; அலைச்சல், ஏமாற்றம், நாய்க்குத்தான் எவ்வளவு திமிர், ‘இருந்தாலும் பாதகமில்லை’ என்று, அதிலிருந்த மண்ணைத் துடைத்தான். நாயின்பற்கள் பதிந்திருந்த இடத்தைக்கடித்துத் துப்பினுன், பொதுவாக அவனுக்குத்துப்ப மனமில்லை. நாய்ப்பற்கள்விஷம் என்பதால் அவன் பயந்தான். அந்தத் தேங்காய்த்துண்டில் அவ்வளவு சுவையிருந்தது.

*　*　*

“சண்டாளப்பயலே’ திருடியதல்லாமல், நாயின்காலையும்ஒடித்துவிட்டாயே’’ என்ற குரல் கிளம்பி மாரியைக் கதிகலங்க அடித்தது. மாரிக்கு அப்போதுதான் உணர்வு வந்தது. அவனுடைய “வெறிநாய்” க்குப்பக்கத்தில், குருக்கள் ஐயர் நின்று கொண்டிருந்தார் கண்களில் தீப்பொறிபறக்க. அக்ராகாரத்தின் மத்தியில், குருக்கள் சாமி வீட்டிற்கே வந்ததையுணர்ந்தான். அந்தப்பகுதிகளுக்கு அவன் அதிகம் வந்ததில்லை. எப்பொழுதாவது வீடுகட்ட, கிணறு வெட்ட, வைக்கோல்போரடிக்க அவன் வருவது வழக்கம். அதுவும் கொல்லைப்புறத்தால் வருவான். நடுத்தெருவில் அல்ல. பாழும்நாய் அவனைஏமாற்றி இழுத்து வந்தது. தலைவிதிதான்! “இல்லை சாமி! பார்க்காம…………”

“என்னடா! களவாணிப்பயலே! பார்க்காமதான் அக்கிரகாரத்து வீதிக்குள் நுழைஞ்சி தேங்காய் திருடியதல்லாமல், காவல்காத்துக் கொண்டிருந்த நாயையும் காலொடித்துவிட்டாயாடா? பாவி!

“எவ்வளவுதிமிர் இருந்தா, சேரிப்பயல் அக்கிரகாரத்துக்குள் அடியெடுத்துவைக்கும்” என்று ஐயர் அடுக்கிக்கொண்டே போனர்.

“இல்லிங்கசாமி! நான் ஒண்ணும் ……………” இடைமறித்துப் பேசுவதையே, விரும்பாதவர்குருக்கள். குருக்களின் கோபம் உச்சநிலையை அடைந்தது.

“யாரடா அங்கே! பழனி! போய் புளியமிலாறை ஒடித்துக்கொண்டு அம்பலகார அருணசலத்தையும் அழைத்துவா” என்று உத்தாவிட்டார். மாரிக்கு ஒன்றுமே புரியவில்லை,

மாரி கிழேவிழுந்து, “நான் வந்தது பிசகுங்க, ஆனல் திருடலை” என்று சொன்னுன்.

“நேக்கு ஒன்னும் தெரியாதடா, அம்பலகாரன் அதோவர்ருன், அவனிடம் எல்லாத்தையும் ஒப்பிச்சுக்கோ.” அம்பலகாரன்எத்தகைய பரபரப்புமின்றி வந்தான் ‘நமஸ்காரம், சாமி’ என்று குருக்களைச் சேவித்துவிட்டு மாரியிடம் சென்ருன். தன்கையிலிருந்த புளியமிலாறினுல் ‘மரத்துக்குப்போ’ என வழிகாட்டினுன். “நான் ஒண்ணும் செய்யலே சாமி.” அம்பலகாரன் ஒன்றையும் காதில் வாங்கவில்லை. மரத்துடன் ஒதுக்கப்பட்டு, மாரியின்கைகள் மரத்தைச் சுற்றிக்கட்டப்பட்டன.

அப்பொழுது தான் மாரிக்குத் தண்டனை என்ற நினைவு வந்தது. பாம்புநெளிவதுபோலப்புளியமிலாறுகள் அம்பலகாரனின் கையில் அசைந்தன.

மரத்தில் கட்டப்பட்ட மாரி, கதறத் தொடங்கினுன். “இல்லீங்க சாமி, திருடலீங்க. நாய்தான் தூக்கி வந்தது. நாஞ்செய்யவேயில்லே. நாஞ்செய்யவேஇல்லே”

“உங்க அடிமை, கும்பிடறேன் சாமி”

“சுளீர், சுளீர்.”

“சாமி, சாமி”

சுளீர், சுளீர், சுளீர் மின்னல் வேகத்தில்தாக்கின. மாரிஉடம்பை நெளித்தான். கம்பளிப்பூச்சி நெளிவதுபோல இருந்தது.

“ஐயோ”

அடித்த அடியிலிருந்துஏற்பட்ட ஊமைக்காயங்களிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பித்தது.

“ஐயோ” ‘சாமி’ என்று மனத்திற்குள்ளே சொற்கள், இருட்டறையில் உலாவும் வௌவால்கள் போல் சுழன்றன. பின் அடங்கின. ‘சுருக், சுருக’என்று தாக்கப்படுவதுபோன்றஉணர்ச்சி. வொய் என்ற சத்தம்.

*　*　*

‘வொய்’ என்றசத்தம். ‘சுருக் சுருக்’ கென்றவலி, காற்று விட்டு, விட்டு அவன்முகத்தில் அடித்தது. மெதுவாகக்கண்ணைத்திறந்துபார்த்தான். அவனுடைய பெண்ஜாதி அஞ்சலை, விசிறிக்கொண்டிருந்தாள். கொசுக்களும், ஈக்களும்அவனைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அப்பா! அசையவே முடியவில்லை. காது உதடு, கைவிரல்கள் எல்லாம் ஏற்கன் தொங்குவன போன்று கனத்து இருந்தன, மாரி கண்ணைத்திறந்ததும், அஞ்சலை “காத்தாயி! சித்தான் காப்பாத்தனும்” என்றுசொல்லிக்கொண்டே விசிறியை வைத்துவிட்டு எழுந்தாள். அதேசமயம் அடுத்தவீட்டுச் சிவகாமி வந்து ‘ஏண்டி அஞ்சலை! ஒம் புருசனுக்கு எப்படியிருக்கு!’ என்று கேட்டாள்.

“இப்பதான் கண்ணை முழுச்சாரு. என்னமோ பொல்லாத வேளை,

“அஞ்சலை! உம்புருசன் குருக்களையா வீட்டுக்கிட்ட என்பாரும்”

“அதையேண்டி கேக்கிறே, எப்பவுமில்லாமல் நேத்திக்குக்கணக்குப்பிள்ளே நாலணுக் குடுத்திருக்காரு. அதை எடுத்துக்கிட்டுப் போய் கள்ளுத்தண்ணிப்போட்டு, ஒண்ணுந்தெரியாம அங்கேமாட்டிகிட்டாரு.”

“அதென்னடி ஆச்சரியமாயிருக்கு! உம்புருசன் ஒருத்தர்தான் இங்கேகுடிக்காம இருந்தாரு. என்னக்குமில்லாமஎன்னேத்திப்போய் குடிச்சாரு! அந்தஆசாமிக்கதான் கொடுமைக்காரர்களாச்சே” இந்தப்பேச்சை மாரி கேட்டுக்கொண்டிருந்தான். பதில்பேச்சு வெளிவரவில்லை.

*　*　*

இரண்டு, மூன்று வாரத்திற்கெல்லாம் மாரி நல்ல நிலைமை பெற்றான், உடம்பிலே [illegible] அசதியும் இருந்தபோதிலும், [illegible]

(அடுத்த பக்கம் பார்க்க)



உறையூர்

**எஸ். எம். எஸ். ஆர். பி.**

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப் பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.


## ராஜாடி ராஜா

1-ம் பக்கத் தொடர்ச்சி

மாடவும், வேலைசெய்வதற்குத்தயாராகவும் இருந்தான். முன் வேலை செய்துவந்த பண்ணைக்குச்சென்றான். பண்ணைக்காருபாரைக் கண்டு கீழேவிழுந்து கும்பிட்டு நின்றான்.

"என்ன, மாரிமுத்து, இவ்வளவு தூரம்? உடம்புசௌக்கியந்தானே? சொல்லியிருந்தால் நாமே உன்வீட்டுக்கு வந்திருப்போமே" என்று காருவாரு பயபக்தியுடன் சொன்னார். மாரி திகைத்துப்போனான். மறுபடியும் மண்ணில் விழுந்து வணங்கிவிட்டு, கைகட்டிநின்றான். திடீரென்று காருவார் காரிஉமிழ்ந்து "சீ! கழுதை! அடக்கஒடுக்கத்தைப்பார். இங்கே பண்ணையில்ஒன்றுங்கொட்டிக்கிடக்கவில்லை. முதலியார் பண்ணையில் திருடர்களுக்கு வேலைகிடையாது. என்னெதிரேநிற்காதே, ஓடிப்போ. மறுபடியும் இந்தப்பக்கம் வந்தால் தோலை உரிச்சுடுவேன்."

மாரி நேரேகுடிசைக்குவந்தான். கதவோரத்தில் அஞ்சலை அழுது கொண்டிருந்தாள். சத்தம் கேட்டதும், மாரியைத்திகிலுடன் பார்த்தாள். "வேலைக்குப்போகலே? கஞ்சியை நான் களத்துமேட்டுக்குக் கொண்டுவரேன்."

"காருவாரு சீறிவிழுறாரு, பண்ணையில் வேலை கிடையாதாம். அது போகட்டும், நீயேன் இம்மா நாழி இங்கேஉட்கார்ந்திருக்கே. வேலைக்குப்போகலே?"

அஞ்சலை பதில்சொல்ல வாயெடுத்தாள். சொற்கள் தொண்டையிலேயே சிதைந்தன. அவதியும், கோபமும் நிரம்பிய கண்கள் மன்றுடின. அவனுடையமுகம்புயலிலே சுழலும் காற்றாடிபோல, நிலையின்றி மாறியது. அஞ்சலை தன்கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழுதாள். அஞ்சலையின்வேலையும்போய்விட்டது. மாரி எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே அவன் தண்டிக்கப் பட்டிருக்கிறான். அவன் அஞ்சலையின்அருகிற்சென்று அவளைச்சமாதானப்படுத்தினான். அவளடைந்த சஞ்சலமோ சமாதானமடையக் கூடியதல்ல. பீறிட்டுவரும்ஊற்றுப் போலத்தடைகளைத் தாண்டிக்கசிந்தது. மாரி மிகவும் கலக்கமடைந்தான், எனினும் கண்ணீர் விடவில்லை. அந்தக்கட்டத்தை அவன் தாண்டிவிட்டான்.

* * *

பண்ணையிலிருந்து நீக்கப்பட்ட பின் மூன்றுநாட்கள் மாரி வேலைக்காகஅலைந்தான். முதல்நாள் அஞ்சலை இருந்த அரிசியைப்போட்டுக் கஞ்சி காய்ச்சினாள், இரண்டாவது நாள் இரவு வெகுநேரமாகிஅஞ்சலை எங்கேயோ நெல்குற்றி உமியும் தவிடும் கலந்தஅரிசி கொண்டுவந்தாள். மூன்றாவதுநாள் இருவரும் முழுப்பட்டினி. இந்த மூன்றுநாட்களிலும் மாரி வேலைக்காக, அந்த ஊரில்தான்நடமாடக்கூடியதெருக்களிலெல்லாம் சென்றுபார்த்தான். அவனைப்பார்த்ததும் எல்லோரும் "மாரியா? வேலை ஒன்றும் இல்லை" என்று வெகுசீக்கிரத்தில் சொன்னார்கள். இவன்மனுப்போடுமிடங்களிலெல்லாம், இவனைப் பற்றிய முடிவும், கருத்தும் தயாராகவே வைக்கப்பட்டிருந்தன. இவனைமுன்னம்பார்க்காதவர்கள், கேட்காதவர்கள்கூட இப்பொழுது அறிந்தோ, அறியாமலோ இவனைப்பற்றிப்பேசலாயினர். அவற்றில் சில மாரியின்காதிலும் விழுந்தன.

"என்ன அக்கா! குழந்தையைத் தெருவில் விளையாடவிட்டு உள்ளே இருக்கிறீர்கள், அதுவும்நகையைப் போட்டு"

"அதையேன் கேட்கிறாய். நகையைக்கழட்டினால் குழந்தை அழுகிறது. ஐயாவும் என்னை அதட்டுகிறார். அவருக்கென்ன தெரிகிறது நாம்படுகிற கஷ்டமும், திகிலும்.", "சரி, சரி, குழந்தையை உள்ளே அழைத்துக்கதவைச்சாத்திக்கொள், உலைக்கு அரிசிபோடனும் நான் போகிறேன், காலம் கெட்டுக் கிடக்கு ஜாக்கிரதை." இவ்வாறு குமுதம் பக்கத்துவீட்டுக் கோமளத்தை அறிவுறுத்திவிட்டுச் சென்றாள். மாரி அந்த வீட்டைக்கடந்து செல்லும்பொழுதுதானா இந்தப் பேச்சு நடைபெறவேண்டும்.!

* * *

மாலை, மிகவும் கலக்கத்துடன் மறைந்தது. இருள் துன்பத்தைப் போலச்சூழ்ந்தது. தாங்கமுடியாத சுமையைச் சுமப்பவன்போல மாரி நடந்தான். விளக்கேற்றப்பட்ட ஒவ்வொரு வீட்டிலிருந்தும் இருள் சற்று எட்டிநின்றது. விளக்கொளியில் மலர்ந்த மகிழ்ச்சி முகங்களைக் கண்டான். பேச்சு அவன் காதில் விழவில்லையேயொழிய, விளக்கு வெளிச்சத்தில்பேசுபவர்களின்முகத்தோற்றம் நன்றாகத் தெரிந்தது. நண்பர்களுடன்உரையாடல், குழந்தைகளுடன்விளையாட்டு, விருந்தினருடன் பேச்சு, இவையனைத்தும் விளக்குவெளிச்சத்தில் மிளிர்ந்தன. தெருக்கோடியை யடைந்தான் மாரி. அங்கிருந்தசாவடியில்சீட்டுக்கச்சேரிநடைபெற்றது. கவலையற்ற கவலையுடன் சீட்டாட்டத்தில் அனைவரும் ஆழ்ந்திருந்தனர். விளக்கொளி அங்கும் களிப்புடன்பிரகாசித்தது.

மாரி ஊரைவிட்டகன்று சேரிப் பக்கம்திரும்பினான். தன்னைப்பற்றி எல்லோரும் பேசிக்கொண்டது அவன் நினைவிற்கு வந்தது. திடீரென்று 'திருடன், திருடன்' என்ற குரல் காதில் விழுந்தது. இருளில் திரும்பிப் பார்த்தான். ஒருவரும் இல்லை. இரண்டடிவைத்ததும் 'திருடன், திருடன், திருடன், திருடன்' என்று குரல்கள் விழுந்தன. வேகமாக நடந்தான். இன்னும் அதிகமான குரல் பலமாகக் கத்தின. மாரி ஓடஆரம்பித்தான். நாலாபக்கத்திலிருந்தும் ஆயிர மாயிரம்குரல்கள் கேட்டன. மாரியின் நெஞ்சு படபடத்தது. கால்கள் நடுங்கின. கைகளில் உதறல்கண்டது. சத்தம் போடுவதற்கு முயன்றான். நாக்கு ஒட்டிக்கொண்டது. விழுந்துவிடுவான்போல இருந்தது. கூக்குரல் அவனை அழுத்துவதுபோலநெருங்கியது. மாரியால் பொறுக்கமுடியவில்லை. கைகளை இறுக்கிக்கொண்டு, பற்களைக்கடித்து நிமிர்ந்துநின்றான். திடீரென்று கூச்சல் அடங்கியது. மாரி சற்றுநேரம்அங்கேயே நின்றான். பின் எத்தகைய படபடப்புமின்றிநடந்தான். அவ்வளவும் வெறும் மனப்பிராந்தி என்றுஅறிந்தான்.

* * *

மறுநாள் அஞ்சலை சேரிக்குத் திரும்பும்பொழுது நன்றாக இருட்டி விட்டது. அவள்சேரிக்குள் நுழையும்போதுசேரி அநேகமாக அடங்கி விட்டது, அங்கொன்றும் இங்கொன்றுமாக நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தனவேயொழிய, பேச்சினரவாரம் கேட்கவில்லை. குடிசையை அடைந்ததும், குடிசையிலிருந்து வெளிச்சம் வந்தது. மூங்கிற் கதவு திறக்கப்பட்டதும், அஞ்சலையின் முகத்தில்பட்ட வெளிச்சம் அவளின்ஆச்சரியத்தைக்காண்பித்தது. அடுப்பினெதிரே மாரிஉட்கார்ந்து கஞ்சி காய்ச்சிக்கொண்டிருந்தான். கஞ்சி கொதிக்கும்சத்தம் அஞ்சலைக்கு இன்னிசையாக இருந்தது. அஞ்சலை சுற்றுமுற்றும் பார்த்தாள். உரலுக்குப் பக்கத்தில் உமிகலந்த நெல், இரண்டு மூன்று சலம் இருந்தது. மாரிதான் குத்தியிருக்கவேண்டும், அதுமட்டுமல்ல அஞ்சலை வருவதற்குள் கடைந்தெடுத்தஅமுதைக்கொடுப்பதைப்போலக்கஞ்சியைக் காய்ச்சிவைக்க மாரி முயற்சித்தான். முடியும் நிலையில் அஞ்சலை வந்தாள்.

* * *

ஏழைகளுக்குஏற்படும்மகிழ்ச்சி சூட்டிரும்பில் தெளிக்கப் பட்ட தண்ணீர்த் துளிபோலப்பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதேமறைந்துவிடும். காலையில் குடிக்கத்தண்ணீர் கொண்டுவர, வாய்க்கால்பக்கம்அஞ்சலை சென்றாள். வேலைக்குப் போகும் சேரியினர்பேசிக்கொண்டது அவளுக்குத் திகைப்பைத்தந்தது. கையிலிருந்த மண்குடம்கீழே விழுந்துஉடைந்தது.

"அண்ணே! நேத்திக்குப் பண்ணைக்கோட்டை சரிந்து கிடந்ததாமே"

"காருவாரேசெய்திருப்பாரடா"

"அதென்னமோ, நேத்திக்குக் காருவாருதான் கூவிக்கொண்டிருந்தார்."

மண்குடம் சிதறிக் காலடியில் கிடந்தது. அவளுடையவாழ்வுகூட ஒட்டமுடியாதபடி உடைந்தது. அப்பொழுதான் விட்டிற்கு நெல் வந்தவிதம் அஞ்சலைக்கும் புலப்பட்டது. பாவி! பரமசாதுபோலஅடுப்பைக்காத்துக்கிடந்தானே. இந்தப் பழி, பாவங்களை யெல்லாம் எப்படித்தான் செய்யமுடிகிறதோ! தேங்காய்த் துண்டைத் திருடியதற்கே உடல்தோலை உரித்தவர்கள், நெல் திருடியதற்கு உயிரோடு புதைத்து விடுவார்களே! என்ன செய்வது? அடிவாங்கினசுரணையை மறந்து மறுபடியும் ஏன் செய்யவேண்டும்? தலைதூக்கிநடக்கமுடியவில்லை. சேரியல்லாம் சிரிக்கிறது. பட்டினிகிடந்து செத்தாலும் சாவது, இனிமேல் மாரி கொண்டுவருவதைத்தின்பதில்லை" என்று உருகினாள் அஞ்சலை. அந்தஎண்ணம்மாரி மீது இருந்த மதிப்பைச் சிதறடித்தது.

வாய்க்காலிலிருந்து குடிசைக்குப்போனஅஞ்சலை அதற்கப்புறம் வெளிக்கிளம்பவில்லை. தன் ஆத்திரம்தீரும்வரை அழுதாள். பிறகு ஓய்ந்து அப்படியே கண்ணயர்ந்தாள்.

'அஞ்சலை! ஏன் அடுப்பு மூட்டவில்லை? என்று கேட்டபடி மாரி குடிசைக்குள் நுழைந்தான். பதிலில்லை. கையிலிருந்த மூட்டையை வைத்துவிட்டு மாரி விளக்கேற்றினான். அஞ்சலை மூலையில்படுத்திருப்பது தெரிந்தது. பக்கத்தில்வந்து, நெற்றியைத் தொட்டுப் பார்த்து "உடம்பு சரியில்லையா? அஞ்சலை! அஞ்சலை!" என்று மாரிகேட்டும் அஞ்சலை ஒன்றுக்கும் வாய்திறக்கவில்லை.

மாரி அடுப்பைமூட்டிப், பானையில் தண்ணீரைப்போட்டான். அஞ்சலை அவனையே கவனித்துக்கொண்டிருந்தாள். மாரி தான் கொண்டுவந்தமூட்டையின்மேலிருந்தவேட்டியைத் தளர்த்திக் கொண்டிருந்தான். அதிலிருப்பதைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலினால், அஞ்சலை மாரியின் பக்கத்திற்போய்நின்றாள்.

(8-ம் பக்கம் பார்க்க)


## பாகவதர்-கிருஷ்ணன் சென்டரல் கமிட்டி
# வேண்டுகோள்

1946௵ ஜனவரி௴ 20உ சென்னையில் கூடிய சர்வகட்சிப் பொதுக்கூட்டத்தில், மே. த. கவர்னரிடம் கருணைமனுச் சமர்ப்பிக்கவும், பிரிவிகவுன்சில் அப்பீலே, வேறு எவர் முயற்சியையும் எதிர்பாராது, பொதுமக்களே நடத்துவதென நிறைவேறியுள்ள தீர்மானங்களை உடனடியாகச்செய்வதற்கும் அதிதீவிரமுயற்சிகள் நடைபெறுகின்றன. இங்கிலாந்துக்குப் பொதுமக்களின் சார்பாக இரண்டு தக்க வழக்கறிஞர்களைப் பிப்ரவரி இறுதிக்குள் அனுப்பவும் ஏற்பாடாகியிருக்கின்றது. எனவே, வெளியூர்களில் இதற்கென நிதி திரட்டிய எல்லாச் சங்கங்களும், பெருமக்களும், அபிமானிகளும், விஸ்வகர்ம சமூக சங்கங்களும் தக்க பொருளுதவி உடனே புரியுமாறு வேண்டப்படுகின்றனர். சினிமா தியேட்டர்கட்கும், பிலிம்கம்பெனிகட்கும், நாடகசாலைகட்கும் இதுகுறித்துத் தென் இந்திய பிலிம்போர்டு சேம்பரின் தலைவர் தனி அறிக்கை வெளியிடுவார். ஆகையால் பணம் அனுப்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புக.

காரியதரிசிகள்,
**பாகவதர்—கிருஷ்ணன் சென்டரல் கமிட்டி,**
29-A. திருவேங்கட முதலி தெரு,
பார்க் டவுன், சென்னை.

# "இந்துமதம் மறைய 50-வருஷந்தான் பிடிக்கும்"

இந்துமதம், மேற்படி மதத் தலைவர்கள், அவர்கள் ஆட்சியின் கீழ் உள்ள அமைப்புகள், எவ்வாறு உள்ளன என்று நாம் எடுத்துக்காட்டும்போது, எள்ளி நகையாடப்படுகிறோம், ஏதுமறியாதார் என்று ஏசப்படுகிறோம்.

இதோ ஒரு படப்பிடிப்பு! இந்து மதம் கரைந்துவருவதையும், அம்மதத் தலைவர்களின் வாழ்க்கையின் கோணலையும் அழகாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. 'காமிரா' ஈரோடு தயாரிப்பு அல்ல! திருச்சியில் தேசியத் தாளாக விளங்கும் 'சிவாஜி' என்ற பத்திரிகை 20-1-46ல் தீட்டிய தலையங்கத்தில் காணப்படுவது. நீங்கள் காண, அதனை இங்கு வெளியிடுகிறோம்.

★

"பிரதிதினமும் இந்து சமூகம் கரைந்துகொண்டேயிருக்கிறது. ஆனால் முஸ்லிம் சமூகத்தினரும், கிருஸ்தவசமூகமும் வளர்ப்பெருகி ஒன்றுபட்டு வலுவடைந்துவருகின்றன. இதுவிஷயத்தில் எந்த இந்துவும் அக்கறை காட்டுவதாயில்லை. இந்து சமூகத்தினரை ஒன்றுபடுத்துவதாகக் கூறிக்கொள்ளும் இந்துமகாசபை முதுகெலும்பு இல்லாமல் வேலை செய்து வருகிறது ஒன்று. இந்த சமூகவேலையில் தீவிரமாக இறங்கி ஜாதிமதபேதங்களை வெட்டிவீழ்த்தி எல்லோரையும் ஒன்றுபடுத்தவேண்டும். அல்லது காங்கிரசுடன் சேர்ந்து நாட்டின் விடுதலைக்குப்பாடுபட வேண்டும். இவ்விரண்டில் எதையும் மகாசபை செய்துவரவில்லை வீண் பலப்பட்டு வருகிறதே என்ற மாத்திரம் வயிறெரிச்சல்பட்டு அலைகிறார்கள் இந்துமகாசபைத்தலைவர்கள். இவர்களால் இனி ஒன்றும் மையாலாகாது.

சங்கராச்சாரியார் போன்ற மதக் குருமார்களும் மடாதிபதிகளும் இந்து சமூகத்தினரின் இகவாழ்வின் நன்மைகளையோ, மதஉணர்ச்சியையோ காப்பாற்றி வலிவுபெறச்செய்யும் சிந்தனையற்றவர்களாகவே இருக்கின்றனர் இவர்கள் எல்லோரும் ராஜசந்யாசிகளென்று பட்டம் கட்டிக்கொண்டு, பாதபூஜைகளும் காணிக்கைகளும் க்ஷேத்ராடனங்களும்மட்டுமே தங்கள் கடமை உரிமைகளாகக்கொண்டு சிறிதேனும் வீரியமோ சிந்தனையோ அற்ற யந்திர வாழ்வின் போகங்களில் முனைந்துவிட்டனர். இதரதேசங்களிலிருந்து நம் நாட்டிற்கு வந்துள்ள கிருஸ்தவ மிஷன்கள் செய்துவரும் சேவைகளைப் பார்த்தும்கூட, நம்நாட்டு மடாச்சாரியார்களுக்கு உறைக்கவில்லை. இந்துமதத் தலைவர்களென்று சொல்லிக்கொண்டு, மதக் கோட்பாடுகளுக்குத் துரோகிகளாக வாழ்ந்து வருகின்றனர். மதம் மக்களை உயர்த்தவேண்டுமென்றோ, அவர்களுக்கு அறிவுவளரச்செய்வதிலோ, பாகுபாடின்றி எல்லோரையும் ஒன்றுபடுத்துவதிலோ நம்நாட்டு மதத்தலைவர்கள் சிரத்தை காட்டியதில்லை. பிறகு என் மக்களின் உழைப்பைப்பயன்படுத்திக்கொண்டு அவர்கள் வாழ்ந்து வருகிறார்களோ தெரியவில்லை.

மற்றொருகோஷ்டி ஒன்று நம்மிடையே மூட்டைப்பூச்சிகள்போல் உபத்திரவம் செய்துகொண்டிருக்கிறது. வைதிகர்களெனச் சொல்லிக்கொண்டிருக்கும் கிரஹஸ்தர்களைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். கிரஹஸ்தாஸ்ரமதர்மங்களைக் கைவிட்டு, வருணாஸ்ரம தர்மத்தைப் புரிந்துகொள்ளாமல், நரலாபிரமாக வளரவைத்துப் பூலோக வைகுண்ட வாழ்க்கையை நரகலோகவாழ்வாக மாற்றிவரும் பிரகஸ்பதிகள், ஒவ்வொரு இந்துக் குடும்பஒற்றுமைக்கும், முற்போக்குக்கும் சத்ருவாக இருந்துவருபவர்கள் இவர்கள்தான்.

எந்தச்சீர்திருத்தக்கருத்து வெளியிடப்பட்டாலும் ஜாதிபோச்சு மதம்போச்சு, பழைமை பாழாய்ப்போச்சு என்று கூக்குரல்இடுபவர் இவர்களே. பாரதிகூறியது போல, பழைமை பழைமை என்று பாவனைபேசும் இந்தப் பாமரர்களுக்குப் பழைமை இருந்தநிலை எதுவும் தெரியாது. புதுமையைக்காணவும் கண்கூசும். அடிமைத்தளை இறுகிக்கொண்டிருப்பதற்கு இதுவேமூல காரணமுமாகும்.

ஆண்டவன் பிரதிநிதிகளாக இருந்துவருபவர்களையும், வைதிகக்குடுக்கைகளையும் இனிக் கௌரவித்துக்கொண்டிருப்போமானால்புராதீனஇந்துமதம்இன்னும் அரைநூற்றாண்டில் நலிவுற்று மறைந்துவிடும் என்பதைமறைத்துப்பயனில்லை."

---

## சியாங்-கே-ஷேக்

### எழுதாத கடிதம்

பாபூஜீ!

தாங்கள், யாத்ரா மார்க்கமாகச் சென்றிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அரசியல் தலைமையைவிடத் தாங்கள் கொண்டுள்ள ஆத்மார்த்தத் தலைமை, சிக்கல்இல்லாதது என்றே எண்ணுகிறேன். பாருங்கள், இந்தச் சீனமக்களின் போக்கை! ஜப்பான்காரன் சண்டை போட்டுக்கொண்டிருந்தவரையிலே, சியாங்கே, எமது தலைவர்! நாட்டு ரட்சகர்! விடுதலை வீரர்! என்றெல்லாம் புகழ்ந்தனர். அந்த மக்கள் காட்டிய பேராதரவை நம்பிய நான், தேசியப் போராட்டத்தின்போது கட்சிகளே கூடாது! அப்படி ஏதாவது கட்சி இருந்தால், அது தேசத்துரோகக் கட்சியாகத்தான் இருக்கமுடியும் என்று சொன்னேன், சீனர்கள் ஆமாம் என்றனர். நான், சரி, இனி நமக்கு எதிராக ஒருகட்சி தலைகாட்டுமா என்று பெருமிதம் அடைந்தேன். நம்ம ஜவர்லால் கூடச் சொன்னாரல்லவா, சீனாவின் தேசீயத்தலைவர் ஒருவரேதான்! அவர்தான் சியாங்-கே-ஷேக். அவருக்குஎதிர்க்கட்சி என்று கூறிக்கொள்ளும், பெர்துஉடைமைக்காரர்கள், வேறுவல்லரசின்கைதாங்கிகள் என்று கண்டித்தார். நல்லதுடு! ஆனால் என் உடம்பிலேதான் தழும்புஏற்பட்டதே தவிர, அந்தச்சிகப்புக்கொடிக்காரர்கள் மேலே, மாசுமருவு இல்லை!

சியாங் எதேச்சாதிகாரி! சியாங் சர்வாதிகாரி! அவருடையசகாக்கள்கோமுடீஸ்வரர்கள், இராணுவத்தலைவர்கள், ஏழையைக் கசக்கிப்பிழியும் அக்ரம வியாபாரிகள் என்று என்மீது சீனக் கம்யூனிஸ்டு ஓயாமல் புகார்சொல்லிக்கொண்டே வந்தான், இது சகஜமாக நடப்பதுதானே, நம்ம பாபூஜீயைக்கூடத்தான் இது போலச் சொல்கிறார்கள், ஆனால்அவரை அசைக்கமுடிகிறதா என்று எண்ணி, நானும், ஏதாவது அந்தப் பயல்கள்பிதற்றட்டும் என்றுகூறினேன். ஆனால் என்ன நடந்தது தெரியுமோ பாபூஜீ! அந்தப் பயல்களின் காரம் எப்படியோ வலுவடைந்தது. ஜப்பான்கொள்ளையடிப்பதுபோன்று, சீனாக்காரனே சீனாக்காரனைக் கொள்ளையடித்தால், உங்களுக்கு ருசியா இருக்கும் வாழ்க்கையிலே! நாட்டைவிடுவிக்கிறேன் என்றுபேசும் சியாங்குக்குக் கூட்டாளிகளாக இருப்பவர்கள், ஜெமின்தாரர், முதலாளிகளாகஇருக்கிறார்களே! சியாங்கின் சுயராஜ்யம், முதலாளி இராஜ்யமாகத்தானே இருக்கும். இதற்காகவா, சீனனே! இரத்தம்சிந்தினாய்? என்று என்னென்னமோ கேட்டு, மக்களை மயக்கியே விட்டார்கள் அந்தக் கம்யூனிஸ்டுகள். சீனாவின் வடமேற்கு மாவட்டம், அவர்களின் முகாம் ஆகிவிட்டது. பொதுஉடைமை ஆட்சியே நடத்தத் தொடங்கினார்கள். 9-இலட்சம் பேர் கொண்ட படையும் திரட்டிவிட்டனர். நில முறையிலே சீர்திருத்தம் செய்தனர். பிர்லா பஜாஜு போன்றவர்களை, தங்கள் ஆட்சியிலே ஒழிக்க ஆரம்பித்தார்கள். தேசியத்தைப் பேசிப்பார்த்தேன், இராணுவத்தைக் காட்டினேன், பிரிட்டன் அமெரிக்கா, முதலிய வல்லரசுகளிடம் எனக்குள்ளசெல்வாக்கைஎடுத்துக்கூறிப்பார்த்தேன், மகாத்மா, பண்டிதர், போன்றவர்கள் எனக்கு ஆசி கூறியிருக்கின்றனர் என்று சொல்லிப்பார்த்தேன், சாந்தி, சமரசம் என்று உபதேசம் செய்துபார்த்தேன். என்னசெய்தும், கம்யூனிஸ்டு, கொஞ்சம்கூட, பணியவில்லை. உள்நாட்டுச் சண்டையேமூண்டுவிட்டது! கடைசியில், சமாதானம் பேசுவது தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. என்ன செய்வது; "வாடா தம்பீ! நீயும் நானும்சீனர்கள்தானே! நமக்குள் சண்டை வேண்டாம்! சாதாரண அரசியல் முறையிலேயே சமரசம் செய்துகொள்ளலாம்" என்று பேசிஅழைத்தேன்; இவர்களுக்கு ரகளை செய்யத்தானே தெரியும், ராஜதந்திரம் தெரியாது அல்லவா என்று நம்பி. பாபூஜீ! அவர்கள் அந்த விவகாரத்திலும் இளைத்தவர்களாக இல்லை. கடைசிவரையில், கொள்கையையே வலியுறுத்தினர். கடைசியில்—சொல்லக் கொஞ்சம்வெட்கமாகத்தான்இருக்கிறது—நான், அவர்களையும் சேர்த்துக் கொண்டு, கூட்டுச்சர்க்கார் ஏற்படுத்த ஒப்புக்கொண்டேன். தேசியப் பட்டாளத்திலும், பொது உடைமைக்காரனின் படை மூன்றிலொருபாகம் இருக்கும். என்ன செய்வது? இந்தச்சிறு கும்பலால் என்னசெய்ய முடியும், நாடு முழுதும்தான் எனக்கு 'ஜே' போடுகிறதே, நம்மை இந்த 'எதிர்ப்பாளர்கள்' அசைக்கக்கூட முடியாது என்று, இந்தக் காலத்திலே நம்ப முடியவில்லை. என் கதையே அதற்கு உதாரணமாகிவிட்டது. பாபூஜீ! நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, என்னைச் சீனர்கள் மகாத்மா என்று அழைக்கவில்லையே தவிர, நானே சீனாவின் ஏகத்தலைவன் என்று என்காது செவிடுபடும்படி கோஷித்தனர். அவ்வளவும், சமயத்துக்கு சத்தற்ற சத்தமாகி விட்டது.

என், கதையைக்கூறித், தங்களுக்குக் கவலையை உண்டாக்க நேரிட்டதற்காக வருந்துகிறேன். தங்கள் 'தம்பி' போன்ற எனக்குநேரிட்ட கதியைக்கூறினது, மக்களின் ஆரவாரமும், ஜெபகோஷமும் மட்டும்போதாது, உறுதியான மனத்துடன் ஒருசிலர் நமது கொள்கையைமறுத்தாலும், நாம் அதனை அலட்சியப்படுத்தக்கூடாது, லெனின்சொன்னதுபோல, சிறுபொறியே பெருந்தீயாகும் என்று நான் தெரிந்துகொண்ட பாடத்தை, இந்தோ—சீன கலாசார ஒற்றுமையின் காரணமாகத் தங்களுக்குக் கூறினேன். கதையிலே தாங்கள், கண்டு கொள்ள வேண்டிய பாடம் இருப்பின், — இருக்கிறது—பெற்றுக்கொண்டு, முதல்நம்பரிலிருந்து இரண்டாம் தரத்துக்கு இழுத்துவிடப்பட்ட எனக்குத்தங்களின் ஆறுதலையும் அளியுங்கள்.

இங்ஙனம்,
தங்கள் தம்பியாக இருக்கும்
பாக்கியம்பெற்றதாக எண்ணிப்பூரிக்கும்,
**(மார்ஷல்) சியாங்-கே-ஷேக்.**

---

## விடுதலை செய்க.

★

"நாங்கள் இங்கே இருக்கவேண்டும் என்று ஆசைகொள்ளவில்லை. போய்விடவும் தயார். ஆனால், நாங்கள் போய்விட்டால், உங்களுக்குத்தானே ஆபத்து; உங்களிடந்தான் இராணுவம் கிடையாதே" என்று ஏகாதிபத்ய ஏஜண்டுகள் கூறிவந்தனர். அவர்களுக்கும் காந்தியாரின் 'அஹிம்சைத்' திட்டம், மிக மிக ருசிதந்தது. "இந்தியர்களே! உங்கள்தலைவரோ ஒரு மகாத்மா. அவரோ உங்களுக்கு அஹிம்சா மார்க்கமே சிலாக்கியம் என்று உபதேசித்திருக்கிறார். எனவே, 'அஹிம்சா ஆஸ்ரமம்' போன்ற உங்கள் பூபாகத்துக்கு வெளிநாடுகளால், ஆபத்து நேரிடாவகையில், பட்டாளம் அமைக்க மாட்டீர்களே! இராணுவ பலமற்ற உங்கள்நாட்டைக் காப்பாற்றவேதான் நாங்கள் இருக்க நேரிடுகிறது" என்று பிரித்தானியம் பேசிற்று. காந்தியாரின் பஜனைக்கூடமாகவே நாடு இருக்கவேண்டும் என்பது, பிரிட்டனின் பிரார்த்தனை. இராட்டை வீரர்களாகவே இங்குமக்கள் இருந்துவிட வேண்டுமென்பதிலே பிரிட்டனுக்குத்தான் சர்க்கா சங்கத்தைவிட விசேஷ அக்கரை.

இந்தக்காரிருளை, விரட்டி அடித்தார் வீரசுபாஷ்பாபு. இராணுவத்தை அமைக்க முடியும், அதிலும் சிதறிக்கிடந்தவர்கள், சோர்ந்துபோனவர்கள், ஆகியவர்களைக் கொண்டும் இரவல் ஆயுதத்தைக்கொண்டும் படை அமைக்க முடியும் என்பதைக் காட்டினார்.

இந்தப்படை வீரர்களை விசாரிக்கக் கிளம்பிற்று இராணுவக்கோர்ட்டு. வேதனையான விசித்திரம் இத்தகைய விசாரணை. விசாரணைக்கு ஆளானவர்கள், போஸ்படையினர். போஸ் படையோ, தாய்நாட்டை மீட்கத்திரட்டப்பட்டது. விசாரணை நடத்துவதோ, நாட்டைப் பிடித்தாட்டும் அன்னிய சர்க்கார்—ஒரு ஏகாதிபத்யம்.

வேதனையும் விசித்திரமும் இத்துடன் நின்றுவிட்டதா? இந்திய விடுதலைக்காக இராணுவம் அமைப்பது ஒரு குற்றம். அந்தக்குற்றவாளிகளை விசாரிக்கும் அருகதையும் அதிகாரமும் எங்களுக்குஉண்டு என்று ஸ்தாபித்துக்கொண்டது பிரிட்டன். அதிலே காப்டன்கள் ஷாநவாஸ், தில்லான் சைகல், போன்றவர்களை, விசாரித்துத்தண்டித்து, ஆயுள்தண்டனையை 'அன்புகாரணமாக' ரத்துசெய்துவிட்டனர். அம்மூவரும் முரசுகொட்டுகின்றனர் இன்று, காருண்ய சர்க்காரின் கருணாசாகரத்தின் பெருமையைப்பற்றி அல்ல, அஜாத்இந்து சர்க்காரின் பெருமையைவிளக்கி.

இதே சமயத்தில், போஸ்படையினரில் ஒருவரான காப்டன் ரஷித்அலி, விசாரிக்கப்பட்டார், ஆயுட் தண்டனை அவருக்கும். ஆனால், மற்றவர்களுக்கு, அத்தண்டனை ரத்துசெய்யப்பட்டு, அவர்கள் விடுதலைபெற்று பவனிவருகிறார்கள், காப்டன் ரஷித்துக்கு, ஆயுட்தண்டனை ரத்துசெய்யப்படவில்லை, ஏழுவருஷச்சிறைத்தண்டனை என்று, சேனாதிபதி கூறிவிட்டாராம்! கருணைகாட்டிக்காட்டி, சேனாதிபதியின் கருணைக் கையுமுதல், குறைந்துவிட்டதுபோலும். மற்றவர்கள், விஷயத்திலே, ஆயுட்தண்டனை முழுவதும் ரத்து செய்யப்பட்டது. ஆனால், காப்டன் ரஷித்விஷயத்தில் சேனாதிபதியின்கருணை. ஏழுவருஷமாவது ரஷீத் சிறையில் இருக்கட்டும் என்றுகூறவைத்திருக்கிறது. ஏன்?

போஸ்படைத்தலைவர்களில் மற்றவர்கள் கூறாதது ஒன்று ரஷித் கூறினார். மற்றவர்கள், 'அன்னியசர்க்காரை விரட்டும் அரியகாரியத்திலே நாங்கள் ஈடுபட்டோம், என்றனர், ரஷித் அதுமட்டும் கூறாது; பாகிஸ்தானுக்காகவும் பரிந்து பேசினார். மற்றவர்கள் விடுதலைபெற்றனர், பாகிஸ்தான் பெறவும் பாடுபடும் நோக்கம் கொண்டிருந்ததாகக்கூறியகாப்டன்ரஷித் ஏழுஆண்டுகளாவது இருட்டறையில் இருக்கவேண்டுமாம்! இந்தப் போக்கைக்கண்டு, யாரும்வேதனை அடையாமலிருக்கமுடியாது. சர்க்கார் உடனே காப்டன்ரஷீத்தையும், விடுதலை செய்வதே நியாயம். போஸ் படையினர்மீது கைவைத்ததற்கே, கிளைவின் தயவாலும் அந்நாளில் இங்கிருந்த கிழட்டுமன்னர்களின் கோலாகலவாழ்வால் ஏற்பட்ட கோணலின் தயவாலும், இன்று இந்தியாவின் எஜமானர்களாக, பிரிட்டிஷார் இருக்கின்றனர் என்பது தவிர, வேறு காரணமும் கூறமுடியாது. போஸ்படையினர்மீது சர்க்கார் கைவைத்ததை, காங்கிரஸ்மட்டுமல்ல. சகலகட்சிகளும் கண்டித்துள்ளன. அப்படியிருக்க, போஸ் படையினரிலேயே, ரஷித்அலி விஷயத்தில்மட்டும் சர்க்கார் மேற்கொண்ட போக்கு, பொதுவாகச்சகலருக்கும், குறிப்பாகலீகினருக்கும், பெரியதோர் மனப்புண்உண்டாக்குவதாகும் இந்தப்புண், நல்லதல்ல! சர்க்கார், உடனே, மற்றவர்களைவிடுதலைசெய்ததுபோல்வேகாப்டன் ரஷித் அலியையும் விடுதலை செய்யவேண்டும்.

---

## திராவிடர் கழகம்

3-2-46ல் கள்ளிகுளம் பாடசாலையில் கழகத்தலைவர் எஸ். வி. டேவிஸ்தலைமையில் கூட்டம்நடைபெற்றது. தோழர்கள் ஏ. சேக்முகம்மது எம்.சங்கரபாண்டியன், எம். மாதவடியான் ஆகியோர்கழகஉறுப்பினர்களை ஏராளமாகச்சேர்க்கவேண்டியதுபற்றியும் கறுப்புச்சட்டைப்படை அமைக்க வேண்டியது பற்றியும், ஆண்டுவிழா நடத்த வேண்டுமென்பதைப்பற்றியும் பேசினார்கள்.

> 'பாட்டாளியின் நுதியிலிருந்து
> பறிக்கின்றன மாணிக்கங்களை
> பிரபுக்களின் கொடுமையால்
> பலனற்றுக் கிடக்கின்றன
> விவசாயியின் நிலமெல்லாம்.'
>
> **'இக்பால்'**

**திருவாரூர்**

17-2-46ல் திருவாரூர் மாணவர் கழக ஆண்டுவிழா நடைபெறும். தோழர் அண்ணாத்துரை சொற்பொழிவாற்றுவார்.


# திராவிட நாடு

காஞ்சி 10—2—46 ஞாயிறு


## டஹ்ரோ! டஹ்ரோ!!

★

வந்தார் மகான்!

தரிசனம் தந்தார்!

பிரார்த்தனை நடத்தினார்!

பஜனை செய்யச்சொன்னார்!

காணிக்கை பெற்றார்!

கைகூப்பித் தொழுதனர்!

பாதத்தில் வீழ்ந்துவணங்கினர்!

ஆரத்தி எடுத்தனர்!

யானை குதிரை, ஒட்டை
முன்வர ஊர்வலம் நடத்தினர்!

இலட்சக்கணக்கிலேமக்கள்
காத்துக்கிடந்தனர்.

மாலை அணிவித்தனர்!
பரிவட்டம் கட்டினர்!

கோயில் மரியாதைகள்
யாவும் செய்தனர்!

சன்னதியிலே ஒருமணிநேரம்
நின்று தியானித்தார்!

பக்தியால் பரவசமானார்!

முகத்திலே தேஜஸ் வீசிற்று!

குரலிலே ஓர் மகத்துவம்
தோனித்தது!

கரத்தை உயர்த்தினார், கண்டவர்அனைவரும், மந்திரசக்திபால்
கட்டுண்டவர் போலாயினர்!

ஊரே திரண்டது அந்த
உத்தமரைக் காண!

நாடெங்கும் அவரைத்
தரிசித்து மகிழ்ந்தது!

1946, என்ற ஆண்டுக்குறிப்புடன் இணைக்காமல், இந்தவாசகங்களைக் கூறிடக்கேட்டால், யாருக்காக "வைபவம்" என்று யோசிக்க வேண்டிய அவசியமே இராது. யாரோ ஒரு மகான், அவதாரபுருஷன், சமயாச்சாரியார், அற்புதம் புரிந்தோன், அருள்பெற்றோன், வந்தார், இராமதாசரோ, கபீர்தாசரோ, இராமானுஜரோ, சைதன்யரோ, யாரோஒரு மகான் வந்திருப்பார், அவருக்காகவே, இத்தனைவைபவம் நடந்திருக்க வேண்டும், என்று யோசிக்காமலேயே கூறிவிடமுடியும். ஏனெனில், சாதுசன்யாசிகளை வரவேற்கும் பரம்பரைப்பழக்கமுள்ள "பாரத்வர்ஷ" மல்லவா இது! ஆனால், இவ்வளவும்இந்தியஉபகண்டத்தின் விடுதலைப்போருக்கு, வித்தூன்றியவர், அல்லது வழிவகுத்தவர், அல்லதுஉயிர்நாடிஎன்றுகூறப்படும்காந்தியாருக்கு, நடந்தவைபவங்கள்! இது, தேசீய சக்தியைத் தருவதாகக்காங்கிரஸ் அன்பர்கள் கருதக்கூடும், களிக்கக் கூடும்! ஆனால், உண்மையில், விழாவுக்குப் பிறகு யோசித்தவருக்கு, இதுவரவில் சேர்ப்பதா, செலவுக்கணக்கிலே எழுதவதா என்றகவலைவந்தே தீரும். தெளிவுள்ளவர்கள், செலவுக் கணக்கிலேதான்இதனை எழுதுவரேயன்றி, வரவுக்கணக்கிலே குறித்திடார். ஏன்?

காந்தியார், காங்கிரசின் தலைமையைஏற்று, நாட்டுமக்களை விடுதலைப்பாதையில் நடத்திச்செல்ல முன்வந்தவர். பலவகைப் "போராட்டங்களிலே" அவை யுக்தமோ யுக்தமில்லையோ என்பது ஒருபுறம் இருப்பினும், பொதுமக்களை வசியம்செய்யக்கூடியபோராட்டங்களைநடத்தி, மக்களைப் பழக்கினவர். சுயராஜ்ய வேட்கையைக்கிளப்பினவர். அவருடைய தலைமையைஏற்று, கட்டளையை நிறைவேற்ற நாட்டிலே "பல இலட்சம் மக்கள்உள்ளனர்" என்று கூறிவந்தபோது, காரிருள் சூழ்ந்திருந்த இந்திய அரசியல் வானிலே புதியதோர் ஒளி, கண்டோம், அதன்பாதையிலேதெளிவு கண்டோம், என்றுகூறிடவும், தேசீயப்போருக்குப் புதியதோர் 'சக்தி' கிடைத்ததுஎன்றும் 'வரவு' கணக்கு எழுத முடிந்தது. உலகிலே, வேறெந்த நாட்டிலும் நடமாடும், நாயகர்களைக்கண்டு, உமக்குள்ள செல்வாக்கைவிட, எமது தலைவர் காந்தியாருக்குள்ள செல்வாக்கு எவ்வளவு அதிகம்பாரீர்! என்று பெருமிதத்துடன் கூறமுடிந்தது. இத்தாலியை விடுவித்த காரிபால்டி போல, பிரான்சை உயர்த்தப்பாடுபட்டநெப்போலியன்போல், அமெரிக்காவின் தலைசிறந்த தலைவனை ஆபிரகாம்லின்கன்போல, எங்கள் நாட்டிலும் ஒருகாந்தியார் இருக்கிறார், அவருக்குள்ள செல்வாக்கு அமோகம்! என்றுகூற முடிந்தது. இம்முறையிலே, இது நாட்டுப் பேரேட்டிலே வரவுக்கணக்கிலே குறிக்கப்பட்ட பெருநிதியாயிற்று. ஆனால், இன்று? வரவு இலாபவகையில் ஒருஇலட்சர், பைத்துஇன்கம்டாக்சுர், பிறவரிகளுர், கண்ட்ரோல் ரூலுக்கு விரோதமாகநடந்ததற்காகக் கட்டிய அபாதமும் சேர்ந்து எண்பதாயிரம்! என்றுஎழுதும், வியாபாரியின் கணக்குப் போல, மக்களின்சக்தியைவிடுதலைப் போருக்குப்பூட்டும், செல்வாக்குப் படைத்த காந்தியார், தேசீயப் பேரேட்டில்வரவுக் கணக்கில்குறிக்கப்பட்டு இன்று செலவுக்கணக்கிலேஎழுதப்படவேண்டியநிலைமை ஏற்பட்டுவிட்டது. அதாவது அரசியலுக்கு, அல்லது விடுதலைப்போராட்டத்துக்கு ஏற்றவர் என்றிருந்ததலைவரை, மகாத்மாஎன்று துதித்து, பஜனைகள் நடத்துவோராக்கி, அரசியல் தலைவர்கள், விடுதலைப்போர் வீரர்கள் பட்டியிலிருந்து அவர் பெயரை, மதத்தலைவர்கள், சமயாச்சாரியார்கள், மகாத்மாக்கள் பட்டிக்கு மாற்றி, "பைத்து" எழுதிவிட்டனர். இது மறக்க முடியாத சம்பவம்! நாட்டுவிடுதலைப்போரை நடத்துவதற்கு மற்றஇடங்களிலே சாதுசன்யாசிகள் தங்கள் காவி கமண்டலத்தையும்துறந்து, போரில் கலந்துகொண்டனர் என்று படித்திருக்கிறோம். இங்கோ நாட்டுவிடுதலைப்போர் நடத்த முன்வந்தவரை, வைதிகம்—தனக்கு ஏற்பட்ட பஞ்சத்தைப்போக்கிக்கொள்ள, தன்னிடம் இழுத்துக்கொண்டது.

அரசகுமாரியை மணம் செய்துகொள்ளக்கிளம்பிய இளவரசன், அவளிடமிருந்து 'ஓலை' கொண்டுவந்த தாதியிடம் மையல்கொண்டு, "ஓலையைப்பிறகு பார்ப்போம், ஒய்யாரி' ஒருமுத்தம்தாராய்!" என்று கொஞ்ச, அரசிளங் குமரியால் காதலிக்கப்பட்ட ஆணழகனை ஆரத்தழுவும் பாக்கியம் தனக்குக்கிட்டியதால், இளவரசனின் இன்ப அணைப்பு கிடைத்ததும்தானுமோர் இளவரசியாகிவிட முடியும் என்ற நினைப்பிலே, வெள்ளாட்டி தன்னையே விருந்தாக்கியகதை போலாயிற்று, தேசீயம், தேடிப்பெற்ற காந்தியாரை, வைதிகம், தன்னிடம் இழுத்துக்கொண்ட கதையும்.

காந்தியார் "மகாத்மா" ஆகாமல், 'தரிசனம்' 'பிரார்த்தனை' 'பஜனை' 'பரவசம்,' "கோயில் மரியாதை" என்பன போன்ற அணிகலன்களை அவருக்குரிய அர்ச்சனையாக்க வேண்டிய அவசியம் ஏற்படாமல், நாட்டு விடுதலையின் தலைவர், அவருடன் பேதம் கொண்டவேறுகட்சியினரே கிடையாது, யாரேனும் பேத உணர்ச்சி கொண்டாலும் அவர் பேசினால் அவர்கள் தமது சந்தேகம் தெளியப்பெறுவர், அனைவரையும் ஓரே கொடியின் கீழ் கொண்டு வந்துவிட்டார், ஐக்கிய முன்னணி ஏற்படுத்தி விட்டார், என்ற அடை மொழிகளைத் தாங்கும்விதத்திலே அவருடையநிலைமை இருக்குமானால், விடுதலைப் போருக்கு எவ்வளவு மகத்தான இலாபம் என்பதைச் சிந்திக்க வேண்டுகிறோம், பஜனையில் கலந்திருந்த தோழர்களை. இப்போது, என்ன நிலைமை தெரியுமோ? நாட்டு மக்களுக்குச் சுதந்திரத் தாகத்தைஎழுச்செய்தவர், விடுதலைப் படையின் ஒப்பற்றதலைவர் என்றபட்டத்தை, வைதிகம் தட்டிப்பறித்துக் கொண்டது, உங்கள் கண்முன்பாகவே உமது உள்ளம், நடந்த சூதை உணரு முன்பு! நாட்டு விடுதலைப் போர்ப்பட்டியிலேபொறித்திருந்த பெயரை, வைதிகம், தனது பட்டியிலே பெயர்த்தெடுத்து வைத்துக் கொண்டது. மகான், மகாத்மா, தேஜஸ், பூஜை, பரவசம், பஜனை, தாளப், பூரணகும்பம், தரிசனம், யக்ஞம், காணிக்கை, பாதசேவை போன்ற பதங்கள், எந்தச் சந்தர்ப்பத்தில், யாருக்கு, உபயோகிக்கப் படுவது முறை, வழக்கம்? விடுதலை வீரர்கள் வரலாற்றிலா? அல்லது சமய குரவர்கள் பற்றியகதைகளிலா? சமயகுரவர்கள் கதையிலே தான் இச்சொற்கள்வரும், இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறும். அதேவிதமான பெருமைஇவருக்கு இருப்பது எண்ணி இன்புறத்தக்கதன்றே எனில், கூறுவோம் கேண்மின். இங்கு நாம் தேடித்தவித்துக் கொண்டிருந்தது, இந்த நாட்டை மீட்டிடும்போர் நடத்தும் தலைவரையே தவிர, சமய குரவரையல்லவே! "நாதன் அருளால்" நமக்குத்தான் அந்தத்துறையிலே பஞ்சமே ஏற்பட்டதில்லையே! எவ்வளவோ மகாத்மாக்களை, மகான்களை, மகரிஷிகளை நாடுதாங்கிஇருக்கிறதே, ஆகவே இப்போது ஒரு புதுமகாத்மா வந்தது, வியப்புக்கு உரியதோ, வேண்டி வரவேற்கத் தக்கதோ அல்லவே. பாரதமாதா, மலடல்லவே இப்படிப் பட்ட மகாத்மாக்களை அம்மை, அடிக்கடி ஈன்று, பழக்கமிக்கவர்களாயிற்றே, நாம், மாதாவின் மணிவயிற்றிலே ஓர் மாவீரர் உதித்தார், அவர் மக்களை ஒன்று திரட்டினர், விடுதலைப் போர் நடத்தினர், என்று கேட்கத் துடிக்கும் நேரத்தில், இவரேஅத்தகையமாவீரர் என்று எந்தக் காந்தியாரைச் சுட்டிக்காட்டி வந்தீர்களோ, அவரையே, பிறகுமகாத்மா என்றும், கண்கண்டதெய்வம் என்றும்கூறி, தேசீயப் பேரேட்டிலே செலவுக் கணக்குக் காட்டிவிட்டீரே, நஷ்டம் நாட்டுக்கு விடுதலை கோருபவருக்கும், இலாபம் வைதிகத்துக்கும் என்பதை உணரவில்லையே!

அவரை, "வைதிகம்" தன்னிடம் இழுத்துக்கொண்டதையும், அதைக் காங்கிரசார் அனுமதித்தது மட்டுமல்ல, அதற்காக ஆனந்தப்படுவதையும், பல்வேறு நாடுகளும், வரவேற்கின்றன; ஏனெனில், எவ்வளவுக்கெவ்வளவு "மகத்துவம்" ஏறுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது என்பது தந்திர சாலிகளான அவர்களின் எண்ணம்

"காந்தியார் கேட்கிற சுயராஜ்யத்தை ஏன் தரக்கூடாது. அவருக்குள்ள அபாரமான செல்வாக்குத் தெரியுமல்லவா? விழுப்புரத்திலே விடியுமுன்கூடிய கூட்டம் பதினைந்து ஆயிரம். மதுரையில் மாபெரும் கூட்டம்! அவருடைய பிரார்த்தனைக் கூட்டத்தைக் கண்டால் போதும், தலைகள் நிரம்பிய சமுத்திரம்" என்று கூறிமுடித்ததும், வெளிநாட்டவர், "உண்மை! உண்மை! அவருக்கு அபாரமான செல்வாக்குத் தான்; அவர் ஒரு மகாத்மா! மகாத்மாக்களை மக்கள் அவ்விதம் தானேபூஜிப்பர், அதிலும் இந்தியரோ, மதவிஷயத்திலே ஆழ்ந்தநம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள், காந்தியாரை மகாத்மாவாகக் கொண்டாடி, அவருடைய பஜனையிலே சொக்கிப் போவதை நாங்களும். பார்த்திருக்கிறோம். படமும் பிடித்திருக்கிறோம். ஆனால், மகாத்மாக்கள், கூறும் எவ்வளவோ விஷயங்களை, பக்தர்களாலேயே நடத்த முடியாமல் போகிறதே, சுயராஜ்யவிஷயம் மட்டுந்தானா? மகாத்மா விஷயத்திலே மக்கள் அனைவரும் மதிப்புத்தருகிறார்கள், ஆனால் அரசியல் தகராறுகள் உள்ளனவே, அதனை மகாத்மாக்களைக்கொண்டு தீர்க்கமுடியாதே. அவர்கள் ஆத்மார்த்தத்துக்கு அல்லவா வழி செய்பவர்கள். அவர்களுடைய அரசியல் அபிப்பிராயங்கள் பெரிதும் அனுபவசாத்யமற்றதாகவே இருக்கும்" என்று கூறி முடிப்பர். எந்தவகையிலே பார்த்தாலும், வரவு, செலவானதுதான் காணமுடியும்.

வைதிகம், ஏன்களிக்கிறது? இந்த இருபதாம் நூற்றாண்டிலே, எங்கு பார்த்தாலும், பழைமையைமுறியடிக்கும் போர்க்குணம் படைத்த தலைவர்களேதோன்றலாயினர். எத்திக்கு நோக்கினும் தங்கள் தர்பாருக்குச் சாவுமணி அடிக்கப்படுவதையே கேட்டனர், கலங்கினர். பொதுஅறிவு, பகுத்தறிவுத்துறைக்கே மக்களை இழுப்பது கண்டனர், புலம்பினர். வேதம் ஒலித்த இடத்திலே ரேடியோ சத்தம், கோயில்மிகுந்த இடத்திலே, பார்க்குகளும், ஆஸ்ரமம்இருந்த இடங்களிலே ஆஸ்பத்திரிகளும், குருகுலங்கள் இருந்த இடங்களிலே, விளையாட்டு மைதானங்களும், தோன்றக்கண்டு, வைதிகர்கள் தமது வாழ்வு சுருங்குவதுதெரிந்துசோகித்தனர். சதி நிறுத்தப்பட்டது, சாரதா சட்டம் பிறந்தது, பெண்களும் ஆண்களும் சமம் என்று பேசப்பட்டது, வைதிகப், சரி, நமதுகாலம்முடிந்துவிட்டது, என்று தீர்மானித்துத் தேம்பிடலாயிற்று. அந்த நேரத்திலே வந்த காந்தியார், வைதிகத்துக்கு அபயம்அளித்தார்! அபயம் அளிக்கச் சென்றவரை, வைதிகம் ஆட்கொண்டு விட்டது. வைதிகத்தைத் திருத்துவேன்என்று கூறிச்சென்றார்' வைதிகமோ, அவரைத்தனதுதிருக்கூட்டத்திலேசேர்த்துக்கொண்டு, திலகமிட்டது. திருப்திக்குரிய காரியமா இது என்று, தேசியத் தோழர்கள், திருவிழா நினைவு குறைந்தபிறகேனும் எண்ணிப்பார்க்கவேண்டுகிறோம்—அதிலும் குறிப்பாகவாலிபர்கள்—சிறப்பாக மாணவர்கள் சிந்திக்கவேண்டும்.

எம்மதமும் ஒன்றே

அரியும் அரனும் ஒன்றே

சத்தியமே ஜெயிக்கும்

ஜாதிமதகுல பேதம் பாராதே

பக்தியோடு பரமனைப்பாடு

பகவான் உன் உள்ளத்திலே
உறைகிறார்

அவர் எங்கும் எதிலும் இருக்கிறார்

அவரை மனமாரப் பஜியுங்கள்

களங்கமற்ற மனமுள்ளவனே
கடவுளைக் காண்பான்

இருதய ஆலயத்திலேயே
இறைவன் இருப்பான்

இவையும், இவைபோன்றவையும், இன்று நேற்று ஏற்பட்ட உபதேசங்களா? இவைகளைக் கூறுத மகான்உண்டா? ஜாதிமதம் உயர்வு தாழ்வு எனும் தீது **சமரச ஞான மகான்களுக்கு ஏது?** என்பது புதுமொழியா? அல்ல! இங்குதோன்றிய மகான்கள் சொல்லிட்டுபோன உபதேசஉரைகள், இன்றும், தாளச்சத்தம் மேளச்சத்தத்துடன், பஜனைக் கூடங்களிலும் பாடப்படும் பதிகங்கள். பதிகம்பாடி, பஜனைக் கூடம் அமைத்த நாம், பதிகங்களிலே பதிந்திருக்கும்உரையின்வழி ஊரைத்திருப்பினேமா? திருப்பிஇருந்தால், இங்கு 'உபதேசியார்கள்' தொகை குறைந்திருக்குமே! உபதேசங்களை உரத்த குரலுக்கு உறுதுணையாக்கிக் கொண்ட இங்கு, காந்தியார் உபதேசித்துக் காணப்போவது என்ன? 'என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கசார்! அவர் எதிரே போனதும்உடம்பேசிலிர்த்துப்போகிறது' என்று பேசுபவர்களையே கேட்கிறோம். இதுபோல எத்தனையோமுறை உங்கள்உடம்பு சிலிர்த்திருக்கிறதே! ஊரிலே சமரசமா மலர்ந்தது! இல்லையே! ஆக, அவர் கூறினதும் புதிதல்ல, உமக்கோ, இத்தகைய உபதேசம்கேட்பதும்பழக்கமற்றதல்ல. இனிஇவர் உரைப்படி, என்னநடக்கும்என்று எதிர்பார்க்கிறீர் என்றுபூஜித்தவர்களைக் கேட்கிறோம். "தீண்டாமையே போகவேண்டும்" என்று கூறுகிறாரே, அதுபுதிதல்லவா, புரட்சிகரமல்லவா, சீர்திருத்தம் அல்லவா அது என்று கேட்பர்; அவ்விதமும் சொல்லமுடியாதே! ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும் அவர்கள் அரங்கனைப்பூஜிப்பவரானல், அவரே நாம்வணங்கும் தெய்வமாமே!! என்று ஆழ்வார்களும் நாயன்மார்களும் கூறினது பல நூற்றுண்டுகளுக்கு முன்பே அல்லவா! அங்ஙனம் கூறுவதெல்லாம், கூறுபவரின் தாராளமனதையும், சமரசஞானத்தையும்,பரிபக்குவத்தையும்,காட்ட உதவிற்றே யன்றித் தீண்டாமையைப்போக்க வில்லையே! இவருடைய' தீண்டாமைஒழிப்பு 'வேறு எவ்விதமானவிளைவு உண்டாக்கும். அதிலேயும்ஆழ்வார்கள்நாயன்மார்களாவது ஆறநெறி, அன்பு என்ற காரணங்களைமட்டும்காட்டித் தீண்டாதவர்வளை ஆதரிக்க வேண்டுமென்று மட்டுமே கூறமுடிந்தது. காந்தியாருக்குத்தீண்டாமைபோக வேண்டும் என்று எடுத்துக்காட்டுவதற்குக்காரணங்கள் அவ்விரண்டுடன்,நன்ருகவிளங்கக்கூடிய,வைதிகர்களும் கணக்குப்போட்டுப்பார்த்துத் தெரிந்துகொள்ளக்கூடிய, காரணம்கூற வழி இருக்கிறதே! புள்ளிவிவரமல்லவா, கோயில்பூட்டுகளை இன்று உடைக்கின்றன. 40 கோடி ஜனத்தொகை—அதிலே 10கோடிமுஸ்லிம்.பாரதவர்ஷத்துப் பழையநாள்இந்துக்களே அதிலே பெரும்பாலோர்! இன்று அவர்களெல்லாம் இஸ்லாமாகாது இருந்தால், வைதிகத்தின் வருமானம் குறைய வழி உண்டா? திவசம்—திதி நடத்தாது, திருமணத்துக்கு தட்சணை தராது, கும்பாபிஷேகத்துக்குப் பொருள் தராது, பத்துக்கோடிபேர்பகிஷ்கரித்துவிட்டனர். அவர்கள் இந்துக்களாக இருந்தவர்கள், நீங்கள் தீண்டாமையைவிடாதகாரணத்தால்,வேறு மார்க்கம்போயினர். அதுபோலவே பல இலட்சம் கிருஸ்தவர்களாயினர்; இப்படிப்படிப்படியாகவருமானம் குறைந்துவிட்டது. ஆறு கோடிக்குமேல் ஆதித்திராவிடர்கள் உள்ளனர். அவர்களைத்தீண்டாதார் என்று இன்னமும் விலக்கியே வைத்திருந்தால், அவர்கள் மதம் மாறக்கூடும்! இந்து மார்க்கம் வேண்டாம் என்று கூறிவிட முடியும். ஆக, 10 கோடி முஸ்லிம், ஆறுகோடி ஆதித்திராவிடர், திராவிடர் 4 கோடி, இந்துக்கள் அல்ல என்று தீர்மானிக்கின்றனர். இப்படி இருபதுகோடிபேர் வெளியேறிவிட்டால், உன்கதி என்ன ஆகும், என்று இந்துவை நோக்கிப் புள்ளிவிவரத்தோடு கேட்கிறார்காந்தியார்! இந்த 'வசதி' அந்நாள் ஆழ்வார்களுக்கு இருந்ததில்லை. புள்ளிவிவரம்காட்டி, வந்துகொண்டிருக்கும் ஆபத்தையும் சுட்டிக்காட்டி, காந்தியார் தீண்டாமை போகவேண்டும் என்று கூறுவது, இந்துமதரட்சகரின் செயலாகுமேயொழியப், புதுமை,புரட்சி என்று எங்ஙனம் ஆகமுடியும்? உபதேசம் ஒருநாளும் புரட்சிமார்க்கமாகாது. புரட்சி, தீண்டாமையைக்கைவிடுங்கள் என்று 'ஜாதி இந்து'வுக்கு உபதேசிக்கும் முறையிலே இருந்திடாது. புரட்சியாக இருக்கவேண்டுமானல், அந்தப்பேச்சு, 'தீண்டாதார்என்ற நிலையை ஏற்றுக்கொள்ளாதீர்கள்! உங்கள் உரிமையைக் கேட்டுப்பெறுங்கள். தாமதித்தால் தலை சாய்க்காதீர்கள்!' எனத்தீண்டாதார் என்று தீயரால் அழைக்கப்படும் மக்களிடம் கூறப்படுவதாக இருக்கவேண்டும். காந்தியாரோ, ஜாதி இந்துக்களிடம், 'இந்துமதம் க்ஷீணிக்கிறது,அதைக் காப்பாற்றத் தீண்டாமையை நீக்குங்கள்' என்று உபதேசிக்கிறார், அதுபோலவே, தீண்டாதாரே! நீங்கள்உங்கள் கடமைகளை மறவாதீர்கள். சுத்தமாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்' என்று அவர்களுக்குஅறிவுரைகூறுகிறார். புரட்சிக்காரர், 'தீண்டாதாரே! நீங்கள் உழுத்தருக்காக உழைத்து உருமாறிவிட்டீர்கள்.நீங்கள் அசுத்தத்திலே இருப்பதற்குக் காரணம் உங்களை இந்த நிலைமையிலே வைத்திருக்கிற கொடுமைதான். உங்களைஅசுத்தத்தில்புரளும்படி அவர்களே, பண்டைநாளிலே இருந்து ஏற்பாடு செய்தனர்.உங்களுக்குத்தரப்பட்டுள்ள வேலையும், அதற்கு நீங்கள் பெறும் கூலியும், உங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள சேரியும், நாகரிகத்தையோ, நல்வாழ்க்கையையோ, சுத்தத்தையோ, சுகத்தையோ, நீங்கள் பெறமுடியாதபடி செய்வதாக இருக்கின்றன. உங்களை இந்தக் கதிக்கு ஆளாக்கிவிட்டு, நீங்கள், அசுத்தமாக இருக்கிறீர்கள் என்று உங்களையே இடித்துரைக்கின்றனர். இதுபுண்ணில்வேல்! வேதனைகண்டு, வாடி, நாடி இழக்காதீர்கள்.விழித்தெழுங்கள். உங்கள் உரிமைகளைக் கேளுங்கள்—பெறுங்கள்!" என்று பேசியிருப்பார். அவ்விதம் பேசினவர்கள் உண்டு! உள்ளனர்! அவர்களெல்லாம் "மாபாவிகள்" என்று பாமரராலும்வைதிகராலும் கண்டிக்கப்படுபவர்கள். மகாத்மாவேண்டுமானல் ஒருமண்டலம் இந்தப் புரட்சி மார்க்கத்திலே இறங்கிப் பார்க்கட்டும், தாளச் சத்தமும் மேளச்சத்தமும், கழற்றி வீசப்படும் வளையல் சத்தமும்,எவ்வளவு குறைந்துவிடுகிறதுஎன்பதைத்தெரிந்துகொள்ளலாம். ஆனல் 'மகாத்மா" பட்டம் கெட்டுவிடுமே தவிர, கொடுமைக்கு ஆளான மக்களின் நிலை உயரும்! இன்று காந்தியார், தமக்குக் கிடைத்துள்ள செல்வாக்கைச், சமுகத்தின் அடிப்படையைத்திருத்தி அமைக்கத் திருப்பிவிட்டால், துதிப்பவர் தூற்றுவர் ஆனல் நாடு நலிவது நின்று, நாடு உயரும்! வைதிகம், அவரை அந்தத் துறைக்குச் செல்லவிடாது ஆரத்தழுவிக்கொண்டது; அவரும் ஆனந்தபரவசத்தில் ஆழ்ந்துவிட்டார். நாட்டுக்கு ஒருதலைவர் என்ற நிலை போய், வைதிகத்துக்குமற்றோர் மகாத்மா கிடைத்தார் என்ற நிலை ஏற்பட்டது. இலாபமா? நஷ்டமா? யாருக்கு இலாபம்? யாருக்கு நஷ்டம்?சிந்தித்துக்கூறுங்கள்காங்கிரஸ் தமிழர்களே! விடுதலைவிரும்பிகளே!

காந்தியாரின் பெருமையைப்பாரீர்! ஜனசமுத்திரம் தெரிவதைக்காணீர்! அவதாரபுருஷனைக் காணீர்! அவர் அடி தொழுதிடவாரீர்!என்று அவசர அவசரமாக அர்ச்சிக்கும் அன்பர்களுக்கு, ஒன்று கூறுகிறோம். காந்தியாருக்குச் 'சேவை' செய்து வைத்த மதுரைக்கோயில் பட்டர், மளமளவென்று அர்ச்சித்தாராம், விளங்கிக்கொள்ள முடியாதபடி. அப்போது காந்தியார் சொன்னராம், நிறுத்தி, நிதானமாக, புரியும்படி, மந்திரத்தைச்சொல் என்று. டஹ்ரோ! டஹ்ரோ! என்றுராம் இந்தியில். அதனையேதான் நாம், காந்தியார் சேவையிலே ஈடுபட்டு, அவர் புகழ்பாடி, அர்ச்சனை நடத்தும் அன்பர்களுக்கும் கூறுகிறோம், கொஞ்சம் நிதானமாகப் புரியும்படி நடத்துங்கள்உங்கள் அர்ச்சனையை! டஹ்ரோ! டஹ்ரோ!! இன்று காந்தியார், மகாத்மா ஆனதன் பலன் என்ன? இலாபம் யாருக்கு? நஷ்டம் யாருக்கு? அவசர அர்ச்சனையிலே சூக்ஷமத்தை மறந்துவிடாமல், இதனைச்சற்றுச்சிந்தித்துப் பாருங்கள்; என்று கூறுகிறோம்.

## திராவிட மணியின் ஒளி

திராவிடமணியான சர். எ. இராமசாமி அவர்கள் இதுவரை எந்தத் திராவிடனும் அடைந்திராத உயர் நிலையை, பல்வேறு நாட்டவரின்குழுவிலே அடைந்துள்ளார். உலக சமாதானம், சமரசம், சுகவாழ்வு எனும், உயரிய கொள்கைகள் கொண்ட, அமைப்பிலே, சமூக, பொருளாதாரக் கிளையின் தலைவராக, இவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இந்நிலை, இதுவரை, இந்தியாவிலேயே யாருக்கும் கிட்டியதில்லை. இவரது ஆற்றலை, வெளிநாட்டு அறிவாளிகளும் வியந்து புகழ்ந்துள்ளனர். மேனாட்டுப் பத்திரிகை ஒன்றிலே இவரைப் பாராட்டி எழுதப்பட்டுள்ள கட்டுரையில், **"ஜாதி பேதமற்ற திராவிட இனத்தவர் சர். இராமசாமி"** என்று புகழப்பட்டிருக்கிறது. பல்வேறு நாட்டுச் சமூகப் பொருளாதாரப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்யும் பணியினை இவரிடம் தரப்பட்டிருக்கிறது. 'யாதும் ஊரே யாவரும்கேளிர்" என்பதனைச் சர். இராமசாமி அவர்களே இன்று, உலகுக்குஉணர்த்துபவராகஇருக்கிறார். வாழ்க திராவிடமணி! வளர்க அவர்புகழ்!

## விளம்பரம்

1946–47வது ஆண்டுக்குச் செங்கற்பட் டிஸ்டிரிக்ட் போர்ட் ஆபீசுக்கு வேண்டிய அச்சுவேலைகளுக்கும் ஸ்டேஷனரி சாமான்கள் சப்ளைசெய்வதற்கும் டெண்டர்கள் தேவை. டெண்டர் மனுவைச்சீல் வைத்த கவரில், "அச்சுவேலை" & "ஸ்டேஷனரி சப்ளை" என்று குறிப்பிட்டு 22—2—46க்குள் சைதாப்பேட்டையிலுள்ள டிஸ்டிரிக்ட் போர்ட் ஆபீசுக்குக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

ஷை இருவேலைகளுக்கும் உரிய டெண்டர் பாரங்கள் சைதாப்பேட்டையிலுள்ள டிஸ்டிரிக்ட்போர்ட் ஆபீசில் பணம்போட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

செங்கற்பட் டிஸ்ரிக்ட்போர்ட்,
சைதாப்பேட்டை,
4-2-46.

டி. சண்முகம், தலைவர்.
டிஸ்டிரிக்ட்போர்ட்

## "சட்டசபையைப் பகிஷ்கரியுங்கள்"

### இலங்கைத் தமிழருக்கு அறிவுரை.

சிங்களவருக்குச் சாதகமானமுறை வகுப்பதாகவும், இலங்கைவாழ் தமிழர்களுக்குப் போதியபிரதிநிதித்துவம் சட்டசபையிலே கிடைக்கமுடியாததாகவும் அமைந்திருக்கும், அரசியல் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும், அந்தச் சட்டத்தின்படி நடத்தப்படும், சட்டசபைத்தேர்தல்களிலே கலந்துகொள்ளக்கூடாது என்றும், சட்ட சபைகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் இலங்கைத் தமிழர்களுக்கு, தமிழர்தலைவர் தோழர் சி. பொன்னம்பலம், அறிவுரைபுகட்டியிருக்கிறார். எங்களை நம்புங்கள், நம்புங்கள் என்று சிங்களர் தலைவர்கள் பேச்சளவில்கூறிப்பயனில்லை, செயலிலல்லவா அவர்கள் தங்கள் எண்ணத்தைக் காட்டவேண்டும்என்று தோழர் பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்திலே, முழக்கமிட்டார்.

## மற்றும் ஓர் வேலை நிறுத்தம்

தொழிலாளரின் துயரம் தொடர்ந்து வளருகிறதேயன்றி, குறைவதாகக் காணேம். பஞ்சவாடை அடிக்கும் இந்த நாளிலேயும், பாட்டாளிமக்களின்வாழ்க்கைக்குத் தேவையான, மிகச்சாதாரண வசதிகளும்பெறமுடியாதபடி, கூலிதரப்படும் கொடுமை ஒழியக்காணேம். பூமிக்கடியிலேபுகுந்துபொன்னெடுக்கும்கோலார் தங்கவயல் தொழிலாளர்கள், தங்கள் குறையைத் தீர்க்க முதலாளிகள் முன்வராதால் வேலை நிறுத்தம் செய்தனர். இப்போது புதுச்சேரி ஆலைத்தொழிலாளர்கள் 8-மணி நேரமே வேலைவாங்கவேண்டும், இல்லையேல் வேலைநிறுத்தம் செய்வோம் என்று, கிளர்ச்சி துவக்கியுள்ளனர். பெருவாரியானதொழிலாளர்கள், 8-மணிநேரவேலையே வாங்கவேண்டும் இல்லையானால்தாங்கள்வேலைநிறுத்தம் செய்யவேண்டும் என்று 'ஓட்' தந்துள்ளனர். வேலைநிறுத்தம் என்றால், முதலாளிமார்களுக்கு டெலிபோன் பேச்சாக, அல்லது வேட்டை நாயை ஏவித் தொழிலாளரை விரட்டுவதான வேடிக்கையாக இருக்கிறது!தொழிலாளர்களுக்கோ, வேலைநிறுத்தம் பெரியவேதனை, அவர்கள் வேதனையைப் பொறுத்துக் கொள்வதற்குக் காரணம், தங்களுக்கு உள்ள குறைபாடு நீங்காதா என்ற ஆவலால். முதலாளிகளும், சர்க்காரும்,ஏழை அழுதகண்ணீர் கூரியவாளொக்கும்என்பதை உணர்ந்து, பாட்டாளி மக்களின் துயரைத்துடைக்க முன்வருவதேமுறை. மேலும்மேலும், அத்தோழர்களைச்சோதனைக்கு ஆளாக்குவது முறையல்ல, நியாயமல்ல, அறிவுடைமையுமல்ல.

## "திராவிட நாடு"

### வாசகர்களுக்கு

ஏஜண்டுத் தோழர்களில் சிலர் தங்கள் பாக்கியை அனுப்பாததற்குக் காரணம், வாசகர்களிற் பலர் அதிக பாக்கியை வைத்திருப்பதே என்று தெரிகிறது. குறிப்பாகத், திருச்சி, பொன்மலை, நீடாமங்கலம், கும்பகோணம், இராசிபுரம், கோயமுத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள ஏஜண்டுத் தோழர்களுக்கு இந்தக் குறை ஏற்படுகிறது. ஆகையால் வாசகர்கள்தங்கள் பாக்கிகளைஉடனுக்குடன் கொடுத்து ஏஜண்டுத் தோழர்களைஊக்குவிக்குமாறுகேட்டுக்கொள்ளுகிறோம்.

**மானேஜர்.**

## பிறப்பு

கே. சோழங்கநல்லூர் சின்னத்தங்கம் – குழுமாயிஅம்மாள் இருவருக்கும் ஒரு ஆண்மகவு பிறந்து தாயும் சேயும் நலம். குழந்தைக்கு"திராவிடமணி" என்று பெயர் சூட்டப்பெற்றதைமுன்னிட்டு ஒரு ரூபாய் திராவிடநாடு வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டது.

# ★ அதே இடத்தில் ★

தியாகராய நகரில் "இந்துஸ்தான் நகா" என்று கேள்விப்பட்டவுடன் 'தணிகாசலம் செட்டிரோடுவழியாகப்போ' என்று வழிகாட்டப்படும் பொழுது, தியாகர் நிருநகரே மாறிவிடுமோ என்றுகூட அச்சம் ஏற்பட்டது. ஆடம்பரங்களும் பத்திரிகைச்செய்திகளும், பஜனைகளுக்குத்தாளம் போட்டுக்கொண்டிருந்த பெருங்கூட்டமும் ஒவ்வொருவருக்கும் திகைப்பைத்தந்திருக்கும். இத்தகைய நிகழ்ச்சிகள்நம்முடைய வளர்ச்சியைத் தடுக்கவா? தேர்தலுக்கு முன்பு நடத்தப்படும் சிறப்புகளா? அல்லது காமராஜ—ராஜாஜி தகராறை ஒழிக்க, அல்ல, மறைக்கும் செயலா? என்று பல விதஎண்ணங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டாயின. இந்துஸ்தான் நகரில் பேசுவோரைப்பார்த்தால் இந்துஸ்தானியேஎல்லோரும்பேச வேண்டும்—பழக வேண்டும்' என்றெல்லாம்கேள்விப்பட்டபொழுது, காங்கிரஸ் ஆட்சி வருமானால் அதில் இந்தி கட்டாய பாடமாக வைக்க இப்பொழுதிருந்தேமுயற்சி செய்யப்படுகிறதா? என்றெல்லாம் மனதில் போராட்டங்கள் மூண்டன. இடையிடையே ராஜாஜிக்கு இந்தி தெரியாது, காமராஜருக்கு இந்தி தெரியாது, மனப்பாடஞ் செய்துவந்த ஒரேவாக்கியத்தை, தட்டுத்தடுமாறி,இந்திபிரசாரசபாத் தலைவர் சொன்னபொழுது காந்தியுட்பட அனைவரும் சிரித்தார்கள், என்றெல்லாம் கேள்விபட்ட பொழுது நமக்கு வியப்புண்டாயிற்று.

புன்னகைதரும் செய்தி. இனப்பிரச்னைபற்றிய நம் உழைப்பும் முயற்சியும் வீண்போகவில்லை. நம்முடைய உழைப்பாலும் முயற்சியாலும் அது உற்பத்தி செய்யப்படவில்லை. இனப்பிரச்னை நாட்டில் பொதிந்துகிடக்கிறது. அதே இடத்தில் காந்தியாரின் இந்திபற்றியபேச்சுகள் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறநேரத்தில்பஜனைப்பாட்டுகள் நெஞ்சைப்பிளக்கும் சமயத்தில்மற்றொரு மாநாடும் நடைபெற்றதாம். பெயர் "திராவிடமொழிகளின்எழுத்தாளர்மாநாடு' பேரில்மட்டுமென்ன, தலைமை வகித்துப்பேசிய கன்னட எழுத்தாளர், மஸ்தி வேங்கடேச அய்யங்காரின் பேச்சுகள் அளவுக்கு மீறிய ஆச்சரியத்தையும் திகைப்பையுமே தருகிறது.

இந்தியாவில் சுமாராக 13 அல்லது 20 பெரும்மொழிகள் இருக்கின்றன. அவைகளில் எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ, அத்தனையளவு பலமொழிகளில் பழக்கமிருக்கவேண்டும். தென்னிந்தியாவில்உள்ள அனைவரும் இந்தி கற்க முடியுமா? என்று நான் சந்தேகப்படுகிறேன். ஆனால் அதிகமானவர் இந்தி கற்றுக்கொள்ளும்படி செய்வது பிரச்சாரசபையின் குறிக்கோளாகஇருக்கவேண்டும். வடநாட்டுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள விரும்புவோர் இந்திகற்றுக்கொள்ள வேண்டும். அதேசமயத்தில் தென்னாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவிரும்பும் வடநாட்டினர் திராவிடமொழிகளில்ஒன்றுஅல்லது இரண்டைக்கற்றுக்கொள்ளவேண்டும். தென்னாட்டி விரும்பவர்கள் நான்கு திராவிட மொழிகளில் ஒன்றுக்கு வடநாட்டில் பிரச்சார சபை நிலைநாட்டமுயற்சிக்கவேண்டும். அது தேசீயக் கண்கொண்டு பார்த்தால் நன்மைபயக்கும்! எத்தகையபேச்சு! இனஎழுச்சி தமிழ் நாட்டில் மட்டுமல்லத் திராவிடம் பூராவும் துளிர்விட்டுக்கொண்டிருக்கிறது. இந்துஸ்தானோ, பனியஸ்தானோ? ஏதாயிருந்தாலும் இனப்பிரச்னை முன்வந்து நிற்கிறது, இடமும் கொடுக்கப்படுகிறது. கன்னட ஆசிரியர் தோழர் மஸ்தியைப் பாராட்டுகிறோம்,அவருடைய தெளிவான கருத்துகளுக்கு. அவர் ஐயுறுகிறார் தென்னாட்டு மக்களை இந்தி கற்கச்செய்ய முடியுமா என்று. எங்கேநின்றுகொண்டு! இந்திபிரசார சபையின் வெள்ளிவிழாக்கொண்டாடுமிடத்தில். என்ஐயம்? என்பதற்கானகாரணங்களைப்பேசினாரோ என்னமோ, பத்திரிகைகளில் வந்ததுஅவ்வளவுதான். மேலும் விருப்பமுள்ளவர்கள் படித்துக்கொள்ளலாம் என்றும் அவர் கூறுகிறார். இதைக் கூறியதற்காகத்தானே தாலமுத்து, நடராசன் சிறைச்சாலையிலிருந்து கல்லறைக்குஅனுப்பப்பட்டனர். தாய்மார்கள்பழித்துக்கூறப்பட்டனர். அத்துடன் தோழர் மஸ்தி நிற்கவில்லை. வடநாட்டுத்தொடர்பு விரும்புபவர்கள் படிக்கட்டும் என்கிறார். மேலும் வடநாட்டாரை இடித்துக்காட்டுகிறார். 'தென்னாட்டுடன் தொடர்பு வேண்டுமெனறால், நீங்கள் தான் திராவிட மொழிகளில் ஒன்று அல்லது இரண்டுகற்றுக்கொள்ளுங்கள் என்று. இதையும் தாண்டி வடநாட்டில் திராவிட மொழிப் பிரச்சாரசபை வேண்டுமென்கிறார்.

---

### திராவிடர்கழகம், பட்டிவீரன்பட்டி.

5—2—46-ல் தோழர் ஆழ்வார் தலைமையில் இவ்வூர் திராவிடகழக அமைப்புக்கூட்டம் நடந்தது. அவ்வமயம்தோழர் ஓ. வி. கே. நீர்ாத்தலிங்கம் தலைவராகவும் தோழர் எம். ஆழ்வார்உபதலைவராகவும் கே. நடராசன் செயலாளராகவும்உப காரியதரிசியாக சி. ஜெயப்பிரகாசன் அவர்களும் தோழர் மீனாக்ஷிசுந்தரம் பொருளாளராகவும் 12-பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### அறிக்கை.

நெல்லை மாவட்டத்திலுள்ளகழகங்கள், 1946-ம் வருடத்திற்கு அங்கத்தினர் சேர்க்கும் ரசீது புஸ்தகத்தை, நெல்லை கழகத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் அந்தந்த ஊரில்மத்தியகழகம்அமைத்திருந்தால் மத்தியகழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இல்லையேல்: கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்:

நெல்லை மாவட்டக்கழகம்,
C/o குமாரவிலாஸ்காப்பிஹோட்டல்,
திருநெல்வேலி டவுன்.

### நினைவு நாள்

பொன்மலை, திராவிட வாலிபர்கழக அங்கத்தினர் தோழர் அம்மையப்பன் வாழ்க்கைத்துணைவியார் இயற்கை எய்தியதை முன்னிட்டு 13—1—46-ல் திராவிட வாலிபர்கழகத் தோட்டத்தில் 'நினைவுநாள்' நடைபெற்றதன் நினைவாக, திராவிடநாடு பத்திரிகைக்குரூ—. நன்கொடை அளிக்கப்பட்டது.

---

**அங்கு!**

எழுடுக்கு மாடி! 7500 கழகங்களுக்குச் சந்திப்பு மாளிகையாக இருக்கும்! 6,000000 (விஞ்ஞான) புத்தகங்கள் கொண்ட அறிவாலயம், விஞ்ஞானமாளிகை, மாஸ்கோவில் கட்டப்படுகிறது, ரஷியாவில்.

**இங்கு!**

முன்னாள் மந்திரி, பாரிஸ்டர் சர். பி. டி. இராஜன், சென்னைக்கு அடுத்த கோடம்பாக்கத்தில், வடபழனி ஆண்டவருக்குக் கோயில் கட்ட, அஸ்திவாரக் கல் நாட்டினார் சென்ற கிழமை.

---

## இரு பெரிய குற்றவாளிகள்!

—(புதுவைச் சிவம்)—

★

புவிப்பொருளை வஞ்சத்தால் மிகவே பெற்றுப்
புலன்செல்லும் வழியெல்லாம் செலவு செய்தே
அவிவேக வாழ்வுதனில் களியாட்டமெய்தி
அகங்களித்து வாழ்பவனோர் குற்றவாளி!
குவிந்துள்ள பெருநிதியால் மேலும் மேலும்
கொள்ளைலாபம் பெருக்கி உழைப்போர்க கீயா(து),
உவகையுடன் அப்பொருளால் உல்லாசத்தில்
உழன்றிடுவோன் அவனைவிடக் குற்றவாளி!

இவ்விருவர் சமுகத்தின் நலனைத் தீய்க்கும்
எரிபோல்வர்! வாழ்வினிலே மக்கள் கொள்ளும்
வெவ்வியகோர் துயர்நிலையும் வறுமை யாவும்
மென்மேலும்ஓங்க 'விதி' சொல்லி ஏய்ப்பர்!
செவ்வியுறும் சமவாழ்வு நேரா வண்ணம்
செங்கோலின் துணைபெற்று நசிக்கி வாழ்வர்!
எவ்வகையும் தந்நலத்தால் புவியை வாட்டும்
இக்கொடியவர் பெருங்குற்ற வாளரன்றோ!

---

புரட்சிக் கவிஞர்

## இசைப் போட்டி

—●—

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனவர்கள், தமிழ்நாட்டின் தனிப்பெருஞ் செல்வம். மொழி, கலை, வாழ்க்கை, ஆட்சி ஆகிய அனைத்திலும் பிறவற்றிற்கு அடிமையாக்கித் தம் நிலை மறந்து வாழும் தமிழர், இன்று புரட்சிக் கவிஞரையும் மறந்துவாழுகின்றனர். ஆயினும் கவியரசர் அவர்களின் புரட்சி மணக்கும் பொன்னுரை மலிந்தபுத்துயிர் தருங் கருத்துகள் தமிழர் மனத்தில் வேரூன்றிப் பதியவேண்டுமென விழைகின்றோம். தமிழிசைபுணர்ச்சி வழியும் இந்நாளில் அவ்விழைவினாலேயே எங்கள் மன்றத்தின் சார்பாக இப்போட்டியினை ஏற்படுத்த முன்வந்தோம்.

இப்போட்டி 24-2-46ம் நாள் ஞாயிற்றுக்கிழமைமாலைமணி4அளவில் சிதம்பரம் இராமசாமிச்செட்டியார் உயர்நிலைப்பள்ளி நடுமன்றத்தின்கண் நிகழும் தமிழறிவும் இசையறிவும் மிக்கமூவர் தலைமை ஏற்றுநடத்துவர். இவர்களின் தீர்ப்பே முடிவானதாகும். சிறுவர்சிறுமியரும் இப்போட்டியிற் கலந்து கொள்ளுதல் தக்கதாதலால், இப்போட்டியை இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று முன்னணி; மற்றொன்று பின்னணி. இப்போட்டிகளில் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி எவரும் கலந்து கொள்ளலாம். முன்னணிப் போட்டிமுதற்பரிசு ரூ. 20; 2-வது பரிசு ரூ. 10. பின்னணிப்போட்டி முதற்பரிசு ரூ. 10; 2-வதுப்பரிசுரூ5. பெரும்உற்சாகத்தோடு தமிழையும் கலையையும் பெருமைப்படுத்தும் வகையில் பலர்கலந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஆர். நடராஜன்,
இளங்கோமன்றத்தலைவர்.
சிதம்பரம்.

### பிரிவு

'சினிமாஉலகம்' ஆசிரியர் பி. எஸ். செட்டியாரின் தகப்பனார் அ பாவாடை செட்டியார் ஜனவரி 31வ வியாழக்கிழமை நன்னிலம் தமது இல்லத்தில் காலமானார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

### கோவிலூரில், இசைவேளாளர் சங்கம்

1-2-46ல் திருவெண்காடு நாதசுரராஜா டி. பி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் இசைவேளாளர் சங்கம் ஆரம்பமாயிற்று.

### பிரிவு உபசாரக்கூட்டம்

5—2—46 செவ்வாய் மாலை மணிக்குச்சின்னக்காஞ்சிபுரம் பா. இ. கழகத்தின் ஆதரவில் எக்ஸைஸ் சப்இன்ஸ்பெக்டர் தோழர் காந்திமதிநாதன் அவர்கள் வேற்றூர்மாற்றப்பெற்றதுபற்றித் தேநீர் விருந்தும், தோழர் கே. எஸ். முனிசாமி தலைமையில் பாராட்டுக் கூட்டமும் நடந்தது. அவ்வமயம் தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை ஆசிரியர் ஈழத்தடிகள், சி. வி. ஏகாம்பரம், சி. என். அண்ணாதுரை, ஆகியோர் அன்னாரின் அரும் பெருஞ் சேவைகளைப்புகழ்ந்து பேசினர்.

பின்கீழ்க்கண்ட முடிவுகள்நிறைவேற்றப்பட்டன.

சேலத்திலும், திருச்சியிலும் நடந்த மாகாண மாநாட்டு முடிவுகளை இக்கழகம் ஏற்றுக்கொள்கிறது.

2. கலைவாணர்களான என். எஸ். கிருஷ்ணன், பாகவதர் இவர்களைச் சர்க்கார் கருணை காட்டி விடுதலை செய்யக்கோருகிறது.

3. கவிஞர் பாரதிதாசன் அவர்களை வரவழைத்துப் பணமுடிப்பு அளிக்க முடிவுசெய்யப்பட்டது.

4. பார்ப்பனரல்லாதார்இளைஞர் கழகத்தைத் திராவிடர் ஆராய்ச்சிக் கழகம் எனமாற்றப்பட்டது.

5. ஷை கழகத்திற்குத் தோழர் கே. எஸ். முனிசாமி தலைவராகவும் தோழர் டி. பி. எஸ். பொன்னப்பா செயலாளராகவும், தோழர்கள் ஈழத்தடிகள், எம். இரத்தினம், சி. வி. இராசகோபால், ஆசிரியர் ஜி. சீனு, சி. வி. ஏகாம்பரம், எ. எஸ். வேணு ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர் டி. பி. எஸ். பொன்னப்பா நன்றிகூறக்கூட்டம்இனிது முடிந்தது.

---

### வாலிபர் சங்கத் திறப்பு விழா, கடலாடி.

1-2-46ல் (வ. ஆ.) போளூர்தாலுக்கா கடலாடிக்கிராமத்தில் சி. பா. நாராயணசாமி அவர்கள் தலைமையில் வாலிபர் சங்கம்ஒன்றுநிறுவப்பட்டது.

---

"உன் உழைப்பின் பெருமையை
உணர்வாய் உழவனே!
நீதான் தானியம், நீயே வயல்
வெளி!
நீதான்மழைநீர், நீயே அறுவடை!

'இக்பால்'

# "சின்னன் சிந்து"

"ஆமாங்க! வெள்ளைக்காரனுங்க வெளியே போகத்தான்வேணுங்க" என்று கண்டிப்பாகச் சொன்னன் சின்னன். சின்னன், சிறுநரியூர்கிராமம், வேலைஉழவு.

"ஏனப்பா, போக வேண்டும்" என்றுநான்கேட்டேன்.

"நீங்க போகக்கூடாது என்கிற கட்சியா?" என்றுன்சின்னன்.

"அப்படிச்சொல்கிற கட்சியே கிடையாது. போகவேண்டும் என்கிருயே, ஏன், என்று தெரிந்து கொண்டாயா, என்பதற்காகத் தான்கேட்டேன்" என்று நான் விளக்கம்கூறினேன்.

"என்னுங்கஇது; எங்கஊருக்குப் பக்கத்திலே இருக்கிற ஐயர்சொன்னரு, அவருமருமகப்பிள்ளை பட்டணத்திலேபெரிய உத்யோகத்திலே இருக்கிறவரு, அவர்கூடச் சொன்னரு,போனமாசம், இங்கேகடலைக் கொட்டைவாங்கவந்தாரு, பெரிய சேட், அவருசொன்னரு, வெள்ளைக்காரன்கவெளியே போகணும்னு, அம்மாம்பேர் சொன்னுங்கஅதாலே நானும் சொல்றேன்; என்னைமட்டும் காரணம்சொல்லுன்னுகேட்கறிங்களே, மத்தவங்களையும்கேளுங்களேன்" என்று சின்னன் சின்னதொரு பிரசங்கமே அடித்தான்.

"சரிஅப்பா! அவர்கள்ஏன்வெள்ளைக்காரர்களை வெளியே போகச் சொல்கிருர்கள்என்ற காரணம்தெரியும் எனக்கு. அவர்களெல்லாம் சொன்னர்கள் என்பது தவிர, வேறேனீஏதாவது காரணம் சொல்வயோஎன்றுபார்க்கிறேன்" என்று நான்கூறினேன்.

"அவ்வளவு பேர் தெரியாமலா சொல்வார்கள்!" என்று சின்னன் கேட்டான்.

"இருக்கட்டும்! அவர்கள் ஏன் வெள்ளைக்காரனை வெளியேபோகச் சொல்கிருர்கள்என்பதையாவது நீ கேட்டுத் தெரிந்துகொண்டாயா?" என்று நான்கேட்டேன்.

"நல்லாச்சொன்னிங்க போங்க! அவர்களைப்போயி, அதுக்கென்ன காரணம், இதுக்கென்ன காரணம் என்று கேட்பார்களா?" என்றுன் அவன்.

"என்னுடன்வா! அவர்கள், என்னென்ன காரணம் கூறுகிருர்கள் என்றுகாட்டுகிறேன்" என்றுகூறினேன். தலையிலே, கதர்க்குல்லாயை மாட்டிக்கொள்ளச்செய்து, நானும் ஒரு கதர் ஜுப்பாவைப்போட்டுக்கொண்டு, ஊருக்குள் சென்றேம். நாங்கள், மூவரைச் சந்தித்தோம். அவர்களிடம் நான் ஏதேதோ பேசிவிட்டுப்பிறகு, வெள்ளையனை வெளியேபோகச்சொல்லும் விஷயமாகக் கேள்விகள் கேட்டேன். அந்தமூவர், சொன்ன பதிலைக்குறித்துக்கொண்டேன், சின்னனும் கவனமாகக் கேட்டுகொண்டான்.

●

"ஆமாம் சார்! மகாத்மா சொல்வதிலே என்னதவறு? வெள்ளைக்கார ஆசாமிகளுக்கு ஏன் சம்பளத்தை அதிகமாகக் கொட்டிக் கொடுக்கணும்! அவன் என்ன தலையிலே கொம்புமுளைத்தவனே! இண்டியன் ஆபீசர்களுக்குத் தெரிந்ததிலே நூற்றிலே, ஒரு பங்குகூட அந்த டாமிக்குத்தெரியாது. எல்லாம் நம்மைக் கேட்டுண்டுதானே செய்கிருன். எதுக்காக அவனுக்குக் கொள்ளைச்சம்பளம் தரணும்? அதனலேதான், வெள்ளைக்காரனே வெளியே போ! என்று மகாத்மா சொல்றர்."

**அனந்தராமய்யர்,**
*ஆடிட்டர் ஆபீஸ் கிளர்க்.*

●

"ஒய்! மதாச்சாரம் சதாச்சாரமெல்லாம் பாழாகிவிட்டது. ராஜ்யமோ வெள்ளைக்காரனுடையது. அவா, நம்ம மதம் க்ஷீணித்துதானு லவலேசமானுலும் வருத்தப் படுவாளோ? அவாளோ கிருஸ்தவா! அவாளுடைய ஆட்சிஇருந்துதானு, நம்முடைய பூர்வீகமதாச்சாரத்தை நிலை நிறுத்தமுடியாது. 'மகாபாபிகளேபழைய ஆச்சாரத்தைக்கெடுக்கிற நீங்களெல்லாம், அடுத்தஜென்மத்திலே, நாயாக, நரியாக, பாம்பாகப்பிறப்பீர்கள், உங்களைரௌரவாதி நரகத்திலே போடுவார்கள்' என்று இப்போ நாம் பேசினு என்ன நடக்கும் தெரியுமோ? என்னை மர்னக்குறைவா பேசினன்னு. கோர்ட்டிலே கேஸ்போடுவா! இந்த ராஜ்யத்திலே நாம் நமது பிதிராஜ்ஜித பெருமையைப் பெறமுடியாது. இந்த சூக்ஷ்மத்தைத் தெரிஞ்சிதான்ஒய், மகாத்மா, வெள்ளைக்காரர்களே! வெளியே போய்த் தொலையுங்கள்! என்று சொல்றர். நியாயந்தானேஅது!"

**கோதண்டராம ஐயர்,**
*கோபிகாரமண கோயில் - அர்ச்சகர்.*

●

"நம்ம மார்க்கட்டிலே, எத்தனை நாளைக்கு, இவர்களை விட்டுவைப்பது. நாம் ஒருசாமான் விலையை நிர்ணயிப்பது என்றல், எவ்வளவு இலாபம்வரும் என்று கவனித்துச் செய்யமுடிகிறதா, அவன் அதே சாமானை என்னவிலைக்கு விற்கிருன் என்று கவனித்துத்தானே, நமது சரக்கின் விலையைநிர்ணயிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்தப் போட்டி நமதுபெட்டியை அல்லவாதாக்குகிறது. இவர்கள் போய்விட்டா, பிறகு நாம் வைத்ததுதானே சட்டம். மார்க்கட் நம்முடையதாகும். மகாத்மா, நம்மைப்போலப் பனியாதானே இந்தசூக்ஷமம் தெரியாதா! அதனலேதான் அவர், வெள்ளைக்காரனை வெளியேபோ, என்கிருர். அவஸ்யமான காரியந்தானே அது"

**சேட் கஸ்தூரிசந்த்,**
*பாம்பே சில்க் ஸ்டோர்.*

●

மூவரும், மூன்று வேறு வேறு இடங்களிலே இருந்தனர், ஆனல் மூவரும், வெள்ளைக்காரன்வெளியே போகவேண்டு மென்பது பற்றி ஏகோபித்த கருத்து வெளியிட்டனர். பிறகு நான் சின்னனை "இப்போதுதெரிகிறதாஎன்இவர்களெல்லாம் வெள்ளைக்காரனை வெளியே போகச் சொல்கிருர்கள் என்ற விஷயம், சின்னஐயர் தனக்கு உத்யோகம் உயரவேண்டும் சம்பளம் வரவேண்டும் என், கிறதுக்காக வெள்ளைக்காரனை வெளியேபோகச் சொல்கிருர். பெரியஐயரோ, தன் குலத்துக்குப் பெருமையும் அதிகாரமும் கிடைக்கும்படியான ஆச்சாராதிகள் வரும் என்பதற்காக வெள்ளைக்காரன் வெளியே போகவேண்டுமென்று கூறுகிருர், சேட்டு, வியாபாரத்திலே தனக்கு இருக்கும் போட்டி ஒழிந்து இலாபம் அதிகம் கிடைப்பதற்காகவெள்ளைக்காரன்வெளியே போய்த் தொலைக்க வேண்டும் என்கிருர் ........................" என்று விளக்கிக் கொண்டே இருக்கையில், சின்னன் குறுக்கிட்டு "ஆமாங்க! அது சரிங்க! அவங்கவங்க தங்க தங்க சொந்த இலாபத்தைத்தான் கவனிக்கிருங்க" என்று குறைகூறினன்.

"ஆகையாலே, வெள்ளைக்காரன் வெளியேபோனு, உனக்கு என்ன இலாபம்என்பதையும்நீமுதலிலேயே தீர்மானிச்சி வைத்துக்கொள்ள வேணும். அதைவிட்டுவிட்டு, காரணமும் கேட்காமல், அவ்வளவு பேர் சொல்றதாலே நானும்சொல்றேன் என்று பேசினு உப்புக்கும் உதவாது" என்றுநான் சொல்ல, சின்னன் சோகித்து, "யார்போனலும் யார்வந்தாலும், எங்கபுழைப்பு இப்படியே ஏழைக பிழைப்பாத் தான் இருக்கும்போலிருக்கு" என்று கூறினன்.

"சின்னன்! அதுக்காக நீசஞ்சலப்படாதே! சலித்தும் போகாதே. வெள்ளைக்காரனை ஒட்டுவதற்கு அவர்களெல்லாம் தயாராக இருப்பதே, சின்னனும் பொன்னனும், முனியனும் வேலனும், கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று ஓடிவருகிருர்கள் என்ற நம்பிக்கையிலே தான். ஆகையாலே, கும்பலோடு சேர்ந்து கூவுவதற்கு முன்பே, நீயும், உன் சொந்த விஷயத்திலேயும் கொஞ்சம் சூட்சமத்தோடு கண்ணுங்கருத்துமா இருந்து, கொஞ்சம் கணக்கும் போட்டுப் பார்த்துக்கொள்ளணும்" என்றேன்.

"என்னபோங்க! நாங்கஏழைக! எதைக்கண்டோம். எல்லோரும் சொல்றப்போலநாங்களும்சொன்னேம்." என்ற கூறினன்.

"அது சரி, சின்னன்! அதற்காக வெள்ளைக்காரனை இருக்கணும் என்று சொல்லிவிடாதே. அவன் வெளியே போறதாலே அவரவர்களுக்கு ஒவ்வொரு விதத்திலே சௌகரியம்வருவதுபோலே, உனக்கும் சௌகரியம் வருகிறமுறையைக் கவனிச்சிக்கணும். உனக்கு இப்போ, வேலை அதிகம், கூலி குறைவு! குடிசையிலே குமுறிக் கொண்டு இருக்கிறாய்! வாழ்க்கையிலே சுகம் இல்லை! ஜாதியிலேயோ, மட்டம்என்று அழைக்கப்படுகிறே. ஊரிலே ஜாதிச் சண்டையும் சள்ளையும் இருக்கிறதைப்பார்க்கிறே. உன் கஷ்டம் எதுவாகஇருந்தாலும், பரிகாரம்தேடப்போனல், பாவத்துக்கு ஏற்றபடி நடக்குது! போன ஜென்மத்துவினை! என்று எதைஎதையோ சொல்லி உன்னை ஏய்த்துவிடுகிருங்க. நீ சுகப்படணுமானு, 'வெள்ளைக்காரன் போகணும்' என்று சொல்வதுபோலவே உன்னைக் கொள்ளை அடித்துவாழ்வைச்சன்னையாக்கி, உன்னை பள்ளுபறைஎன்று தள்ளிவைத்து, ஏழையாக்கி, எதுக்கெடுத்தாலும் எதாவது கதைபேசி ஏய்க்கிற கூட்டமும் அந்தக்கூட்டம் தருகிற வாட்டமும் ஒட்டப்படவேணும்என்று சொல்லணும்" என்றேன்.

"என்னுங்க இது, நீங்க லெச்சர் பண்றிங்களே! நான் எப்படி அவ்வளவையும் கவனத்திலே வைத்துக் கொள்வேன்" என்றுன் சின்னன்.

"சின்னன்! நான் சொல்வதுசரிதான்னு உனக்குத் தோணினு போதும்; அதை உன் நினைப்பிலே நிறுத்த ஒருபாட்டுக்கட்டித்தருகிறேன், அதைப்பாடினு அவ்வளவு விஷயமும் அதிலே அடங்கிவிடும்" என்றேன்.

"சொல்லுங்க, பாட்டு" என்று சின்னன் ஆவலுடன் கேட்டான். சொல்ல ஆரம்பித்தேன், சின்னன், தாளம்போட்டபடி, கூடச்சொன்னன். இதோ அந்தச் "சின்னன் சிந்து."

வெள்ளைக்காரக் கூட்டமெல்லாம்
  வெளியேறிப் போகணும்
சள்ளைபிடிச்ச வாழ்வுபோயி
  ஒருசவுகரியம் பிறக்கணும்
கொள்ளையிடும் கும்பலது
  கூண்டோடே தொலையணும்
பள்ளுபறைஎன்ற பேச்சைப்
  பழசாக்கிப் போடணும்
ஏழை எளியவங்க
  பிழைக்கவழி தேடணும்
என்ஜாதி உசந்ததென்னும்
  எண்ணக்காரன் ஒழியணும்
எல்லாரும் ஒண்ணுஎன்னும்
  எண்ணம் உதிக்கணும்
எதைஎதையோ சொல்லிஎங்களை
  ஏய்க்கிறமுறை சாகணும்
நாலுபேருபோலே நாங்க
  நன்றாக வாழணும்
நாட்டுக்குடையவங்க நாங்க
  என்பது தோணணும்

## கலைஞர்பால் கருணை

★

"கலை உலக மணிகளான என். எஸ். கிருஷ்ணன், பாகவதர், இருவரும் ஆயுட்தண்டனை பெற்றிருப்பதுகலைஉலகுக்குப்பெருநஷ்டமாக இருப்பதால், சர்க்கார் கருணைகூர்ந்து அவ்விருவரையும் விடுதலைசெய்விக்க வேண்டுமென்று இந்நகர சபை கேட்டுக்கொள்கிறது" என்ற தீர்மானம், காஞ்சிபுரம் நகரசபையில் 30—1—46ந்தேதி தோழர் எம்.பொன்னுசாமிமுதலியார் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கோயமுத்தூரைச்சார்ந்தகுனியமுத்தூர்ப் பஞ்சாயத் போர்ட்டார், கலைஞர் இருவரையும்கருணைகாட்டி விடுதலை செய்யுமாறு சர்க்காரை வேண்டித் தீர்மானம் செய்துள்ளனர்.

## தமிழன் கதி

"சயாமில், யுத்தவேலைக்காக 88000 பேர் சேர்க்கப்பட்டனர். இவர்களில் 35,000பேர்தவிர இதரர்கள் மாண்டுவிட்டனர். மரணத்துக்கு முக்கியகாரணம்பட்டினியே. உயிருடன் இருப்பவர்களில் பலர் விதவைகளும் இருக்கின்றனர்" என்றதோழர்எம். எஸ். ஆனே, பிப்ரவரி 3ல் கூறி இருக்கிருர்.



ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
துடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் மேல்வீதி, கும்பகோணம்.
எமது சோல் ஏஜண்ட்:—
M. E. அப்துல் ரகிமான் சாகிபு, புகையிலை வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணாமலை.

# ராஜம் விலாஸ்

கத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 கெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.


## ராஜாடி ராஜா

2-ம் பக்கத் தொடர்ச்சி

"அஞ்சலை! கஞ்சி ஏன் போட வில்லை?"

"பசியில்லை?"

'பசியில்லையா! சரி, இந்தா வாழைப்பழத்தைச்சாப்பிடு'என்று கூறிக்கொண்டே மாரிமூட்டையை அவிழ்த்தான். வாழைப்பழக்குலை, பகுதி பழுத்தும், பகுதிகாயாகவும் இருந்தது. பாம்பைக்கண்டு ஒதுங்குபவள்போல எட்டிவிலகி,'இதை யெங்கே திருடினாய்?" என்று துடி துடிப்புடன் கேட்டாள் அஞ்சலை

மாரி வாழைப்பழத்தைக் கீழே வைத்து அவளையே உற்றுப்பார்த்தான். அவனுடைய பார்வையில் ஆச்சரியம் குடிகொண்டிருந்தது. ஆனால் அந்தக்கேள்வியால் அவன் திகைப்படையவில்லை. "அஞ்சலை! உட்கார்" என்றான் மாரி. அஞ்சலை உட்கார்ந்தாள். மாரி கதைசொல்லுபவன்போல, "ஏன் அப்படிக் கேட்கிறே? என்றான்.

'எனக்கு எல்லாம் தெரியும். பண்ணையில் போய் நெல் திருடியதைப் பார்த்தாங்கன்னா உன் உயிரைத் தொலைச்சிடுவாங்க"

"கோட்டையிலிருந்து எடுத்தேன்"

"எடுத்தேன்! வெட்கமில்லை, திருட்டுவேலை, செய்ய? பிராணனை விட்டுவிடலாம் போலிருக்கே எனக்கு"

"அப்படி யெல்லாம் செய்துடாதே அஞ்சலை"

"இல்லை மவராசாவுக்கு வாக்கப்பட்டு மவராணிப்பட்டத்தை அடையணும் என்கிறியா. என்தலைவிதி உன்னை நம்பி வந்தேன்"

"இப்போ ஏன்வருத்தப்படுறே"

"திரும்பித் திரும்பி அதையேக் கேட்கிறியே, திருட்டுப் புத்தியே அப்படித்தான்"

"நான் என்னசெஞ்சேன்? பண்ணையிலேஎனக்குக்கொடுக்கவேண்டிய நெல்கூலி பாக்கியிருந்தது. நான் கேட்டுப்பார்த்தேன். காருவாரு கொடுக்கவில்லை. கேட்காமலேயே எடுத்துவந்தேன்."

"ரொம்ப நாயமான பேச்சு"

"நியாயமோ,அநியாயமோ,நாம்தான் அதையெல்லாம் கவனிக்கிறோம். காருபாரு அதைப்பார்த்தாரா? குருக்களுக்கு நியாயமென்னா என்னான்னே தெரியாது. அப்படியிருக்கும்போது, நாம் மாத்திரம் நியாயம்பேசி பலன்என்ன? முதுகுத்தோல்உரியவேண்டியதுதான். நியாயம்பேசி நேற்றுக் களத்துக்குப்போயிருந்தால், ஒன்று நெல்லைவிட்டு திரும்பி இருவரும் பட்டினிகிடப்போம், இல்லையென்றால் அவனுக்கெதிரே எடுத்து அடிபட்டு அங்கேயே உசிரை விட்டிருப்பேன்"

"அதற்காக ஒருவருக்கும் தெரியாமே திருடனும்! இந்தப் பழி, பாவத்தை யெல்லாம் எங்கே போயத்தொலைப்பது"

"நேத்திக்கிக்கூட அப்படித்தான் நினைத்தேன். பழி, பாவம்என்றெல்லாம்பட்டது. இராத்திரிஅதைமாற்றிக்கொண்டேன். நெல்லை எடுக்கும்பொழுது கைகள் நடுங்கின. ஆனால் சாப்பிடும்பொழுதுநாக்குக் கூசவில்லை. கஞ்சி காய்ச்சிய பொழுது சந்தோஷமாயிருந்தஉன் முகத்தைப் பார்த்ததும் பழி பாவமெல்லாம் பறந்துபோச்சு"

"திருட்டு நெல் என்றால், நான் சாப்பிட்டிருக்கமாட்டேன். அதை விஷம்போலத் தள்ளியிருப்பேன்"

"பைத்யக்காரி! கோட்டை கட்டி வைக்கப்பட்ட நெல்லு முச்சூடும் நம்மிடமிருந்து புடுங்கப்பட்டது. ஊரிலே வாங்கிய தேங்காய்கள் தான், குருக்கள்வீட்டு வாசலிலே காய்கிறது"

"அது போவுது, இந்த வாழைப் பழம் ஏது?"

"அது போவுது என்று சொல்லாதே. அதுசரி என்று சொல்லு. இந்தப்பழத்தைத்திண்ணுபார். தித்திக்கிறதா இல்லையா என்று பின் சொல்லு"

"திருட்டுப்பேச்சு பேசிவிட்டு, அதை மறைத்துத் தித்திப்புப்பூச்சு ஏன் செய்யறே"

"அஞ்சலை!வாழைப்பழச் சங்கதி பாக்கி யிருக்கே. இந்த வாழைப் பழக்குலை குளத்துமேட்டுவாழைத் தோட்டத்திலிருந்தது"

"அடபாவி! நான் நினைச்சது சரியாய்போச்சுது, இதுவும் திருடா? அதுவும் பண்ணைத் தோட்டமாச்சே"

"எதற்கெடுத்தாலும், திருடு, திருடு என்று கூவறியே. நான் தண்ணி இறைக்கிற வாழைத்தோட்டத்திலிருந்துதான், இதை எடுத்தேன். இதற்குமுன்னே குலைபழுப்புக்கண்டதும் பண்ணையிலே கொண்டுபோய்க் கொடுப்பேன். அதற்குப்பதிலாக அழுகிப்போன பழங்களை வெளியே தள்ளுவார்கள். அதைஎடுத்துவந்துஉனக்குக்கொடுப்பேன். அப்பொழுதெல்லாம்தண்ணீர் இறைச்சு மூச்சுத் திணறும் போதும்கூட பழத்தைத் திங்கனும்னுதோணுவதில்லை, நாம்தான் பசியாத்த வாழைப்பழம் திங்கிறோம். பண்ணையில் மாட்டுக்கும்நாய்க்கும் போடுகிறாங்க. வாழைப்பழம்அவர்கள் வீட்டில் அழுகுப் பொருள். நாய்கூடச் சமயத்தில் சீந்துவதில்லை. அழுகியதும் குப்பையுடன் வெளியேவந்து, நம்முடைய குடிசைக்கு வருகிறது."

"சரி, சரியானபுத்திமாராட்டம். பேச வேறே கத்துக்கிட்டே."

"குருக்களையா என்னை அடிக்கிறதுக்குமுன்னே எவ்வளவு அடக்க ஒடுக்கமாயிருப்பேன். கள்ளுத் தண்ணிபோட்டு, கலகம் பேசினேன்னு ஒருபுகார்கூடக் கிடையாது. அடிபட்டநாள்கூட, கணக்கப்பிள்ளையின் நாலணாவை எடுக்க எனக்குமனம் வரலை. நாயின்வாயிலிருந்த துண்டுவெள்ளிபோல இருந்ததால், அதைநாயிடமிருந்துஎடுக்க விரட்டினேன். அதுகூடத் தப்புதான். அப்பஇருந்த கவலையும், பசியும் என்னமோ தூண்டியது.அதற்கா நான்பட்ட அடிகள்எவ்வளவு? அடிச்சவர்கள் உடம்பைமாத்திரம் அடிக்கவில்லை, என்னுடைய மனசு புத்தி எல்லாத்தையும் புண்ணாக்கி விட்டாங்க. உண்மையாகவே என் உசிருபோய்ப்புதுஉசிருவந்திருக்கு 'நான் திருடலை' என்று கண்ணீர் விட்டுக் கதறினேன், அவர்கள் கேட்டார்களா? நாயின்மீதுபச்சாதாபப்பட்டார்களே தவிரஎன்னை யாராவது சமாதானப்படுத்தினார்களா? நாய்கடித்துப்போட்டதேங்காய்த்துண்டு. அதைத்திருடியகுற்றம் என்மேல். நீகூட நம்பினாய். அடுத்தநாள் நீ பக்கத்து வீட்டுப் பொண்ணோடு பேசிக்கொண்டது எனக்குக்கேட்டது. குடித்துவிட்டுத்திருடியதாகப் பேசிக்கொண்டீங்க. அப்பொழுதே உங்களிடம் சொல்ல முயற்சித்தேன், முடியவில்லை. நடமாட முடிந்தபொழுதும் பலரிடம் சொன்னேன். 'நான் திருடலை' என்று. சிலர் தலையசைத்தார்கள். சிலர் என்னிடம் பரிதாபம்காட்டினார்கள். என் பேச்சுச் சிலருக்குக் கோபத்தைக்கொடுத்தது. ஒருவராவது என்னை நம்பவில்லை. பிறகுதான் 'நான் செய்யவில்லை' என்பதை நிரூபிப்பது முடியாது என்று கண்டேன். அதற்காகப்பழியை ஏற்றுக்கொள்ளவில்லை. யாராவது 'திருடன்' என்று சொன்னால், நான்முறைத்துப்பார்ப்பேன். பிறகு அதுகூடமுடியவில்லை. திரும்பிப்பார்த்த இடங்களிலெல்லாம் 'திருடன்' என்ற குரலே வந்தது. எங்கு சென்றாலும் 'திருடனுக்கு' வேலைகிடையாது, என்ற பேச்சு. அந்த நிலையில் உனக்குப் வேலை போய்விட்டதாகச்சொன்னாய்.

வேதனை யடைந்த மனசோடு வீட்டிற்கு வந்தால், அழும் அஞ்சலையையும், அவிந்த அடுப்பையும் பார்த்து மனசுமுறிஞ்சி போச்சி. குழந்தைமுதல் கிழவர் வரை திருடனுக்காக என்பெயரைச் சொன்ன பொழுதெல்லாம் நான் மறைக்க கஷ்டப்பட்டாலும், பழியைலட்சியம் பண்ணாத எருமைபோல அலைந்தேன். அடிக்கடி நினைச்சுப்பார்ப்பேன். 'நான் திருடவில்லை ஆனாலும் திருட்டுப்பெயரும்திண்டாட்டமும். அதற்கடையாளம் உடம்பு பூராவும் உள்ள தழும்புகள். களவுசெய்யவில்லைஆனால் அதைவிட அதிகமாகத்,திருடினால் கிடைக்கும் தண்டனையைவிடப்பலமடங்கு அதிகமான தண்டனை அனுபவிச்சேன், வெளியே தலைநீட்டினால் பழியும், பேச்சும். ஆனால் வீட்டிலே பசியும் கண்ணீரும். திருட்டுப்பட்டத்தை ஏற்றுக் கொண்டேன்.இப்பொழுதுஎன்னை முன்போலவே பழிப்பார்கள்,ஆனா கொஞ்சப் பயத்தோடு! முன்பு பசித்துக்கிடந்தேன். இப்போது பசிநீங்கியது. நான் திருடனா? நான் ராஜாடி, ராஜா! அகப்படாதவரையிலே ராஜா! அகப்பட்டுக்கோண்டா உதைப்பாங்க! அதுதான், எனக்கு முன்பே நடந்ததே— ஒருபாவமும் அறியாதபோதே, இப்ப அடிச்சா என்னவாம்!"

"தா! என்ன இது, ஊருக்குத் திருடனா இருந்துகிட்டு நான் தாண்டிராஜான்னுஉளற்றே, இதெ கேட்டு நான் ரொம்பச்சந்தோஷப் படுவேன்னு நினைக்கறயா. எவனுச்சர், இந்த 'ராஜா' திருடறப்போ பார்த்தூட்டால்லோதெரியும்ராஜா பாடு!"

"இந்த ராஜாபாடு மட்டுந்தானா? நெஜமாலம் ராஜா கூடத்தாண்டி, சண்டையிலே தோத்துப்போனா இன்னொரு ராஜா கையிலே அடி படுவான்!!"


தந்தி:- "புறாமார்க்" திருச்சி.





## திருநெல்வேலித் திராவிடர் மாநாடு

திருநெல்வேலி மாவட்டத்திராவிடர் கழக3வதுமாநாடு 26, 27–1–46தேதிகளில் திருச்சித்தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள்தலைமையில் மிகவும்சிறப்பாக நடைபெற்றது. பெரியார் மாநாட்டைத் திறந்துவைத்துத் தமிழ்மொழி—திராவிடர்நிலை என்பனபற்றி விரிவான பேருரை நிகழ்த்தியபின்னர், தோழர்கள் அன்பழகன், ஜனார்த்தனம், சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாநாட்டுக்குழுவினர்நடிகமணிகளான என்.எஸ். கிருஷ்ணன்—பாகவதர் விடுதலையைக் கோரி ஓர்தீர்மானம் நிறைவேற்றினர்.

மாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் ஏ. வி. முத்தய்யா அவர்கள்தலைமையில் அன்றுமாலை ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது.

அன்றிரவு தோழர் எம். ஆர். இராதா அவர்களும் பார்ட்டியும் "போர்வாள்" என்றநாடகத்தின்மூலம் மக்களை மகிழ்வித்தனர். தோழர் பிரமநாயகம் அவர்களின் நன்றிகூறலுடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் இனிதுமுடிந்தன.

திருநெல்வேலி நகரசபையினர், பெரியாரின் சேவையைப்பாராட்டி நகரசபையின்சார்பில் ஒருவரவேற்பளித்தனர்.






ted Printed and Published by C N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.